ISSN 1391-9504

# விஜய்

Wijey - විජෙයි

15-11-2004 - மலர் 01, இதழ் 17



## எண்ணம் கவரும் வண்ண மலர்கள்



* குருதியிலுள்ள கூறுகள்...
* ஒட்டகப் போட்டியில் ரோபோக்கள்....
* பிறப்புச் சான்றிதழின் முக்கியத்துவம்

விலை ரூபா: 10/=



## ஈத் முபாரக்
நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கவிச் சித்திரங்கள் 1 தயாரிப்பு: நவசீலன்

# கவிக் கஞ்சிய சுவர்ப் பிசாசு

சோழ மன்னனின் அரசவையில் ஆஸ்தானப் புலவராகக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் இருந்த போது சோழ மன்னனுக்கும் கம்பருக்கும் இடையில் ஒரு பிணக்கு ஏற்பட்டு விட்டது. மன்னனிடம் செல்வச் சிறப்பு இருந்த போதிலும், அவன் கவிச்சிறப்பு மிக்க தன்னை அவமதிப்பதைக் கம்பரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உடனே கம்பர் அவனிடம் பெற்ற விருதுகள், பொன்மணிகள், ஆடை, ஆபரணங்கள் என்பனவற்றையெல்லாம் அவன் முன் கழற்றி வைத்தார். பின்னர் அவனைப் பார்த்து ஒரு கவி பாடினார். அந்தக் கவிதை இப்படி அமைந்திருந்தது.

மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ
உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்
என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத
வேந்துண்டோ? உண்டோ?
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு!

அதாவது, நீ மட்டும் தான் மன்னனா? உன்னுடைய நாடு மட்டும் தான் வளமுள்ளதா? உன்னை நம்பித்தான் நான் தமிழைப் படித்தேனா? என்னை உடனேயே ஏற்றுக் கொள்ளாத வேந்தன் எவராவது இருக்க முடியுமா? மரக்கிளைகளுக்குள் குரங்கை ஏற்றுக் கொள்ளாத கிளை என்று ஒன்று இருக்க முடியுமா? இப்படி அந்தக் கவிதையின் பொருள் அமைந்திருந்தது. பின்னர் கம்பர் அங்கிருந்து வெளியேறி வேறு ஊர் போய்ச் சேர்ந்தார்.

அந்த ஊரில் உள்ளவர்கள் அவர் பிரபல கவிஞர் கவிச் சக்கரவர்த்தி கம்பர் என்பதைக் கண்டு கொள்ளவில்லை. அவரும் யாரிடமும் தான் யாரென்பதைக் கூறவில்லை. ஆனாலும், பசி என்பது வரத்தானே செய்யும். பல நாட்கள் பட்டினி கிடந்தார். எத்தனையோ பேரிடம் உணவு கேட்டுப் பார்த்தார். யாரும் கொடுப்பார் இல்லை.

அந்த ஊரில் வேலி என்னும் தோட்டக்காரி ஒருத்தி இருந்தாள். அவளின் தோட்டத்தில் சுவர் ஒன்று உடைப்பெடுத்து இருந்தது. அந்தச் சுவர் கட்டி முடிக்கப்படும் போதெல்லாம் அது உடைந்து விடுவதால் அதில் இருக்கும் பிசாசு ஒன்று அதனை இடித்துத் தள்ளிக் கொண்டே இருக்கிறது என்று பலரும் கூறினர். அந்தத் தோட்டக்காரியும் சுவரைக் கட்டி முடிப்பவருக்கு ஒரு குறுணி நெல் கூலியாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தாள். (குறுணி என்பது அந்தக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட அளவை முறை) கம்பர் இதனைக் கேள்விப்பட்டுத் தான் அந்தச் சுவரைக் கட்டி முடிப்பதாகக் கூறித் தோட்டக்காரியிடம் கூலியைக் கேட்டார். தோட்டக்காரியோ
"முதலில் சுவரைக் கட்டி முடித்து விட்டு வா, பின்னர் கூலியைத் தருகிறேன்." என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

கம்பர் அன்று முழுவதும் பசியுடனும், தாகத்துடனும் அகோர வெயிலில் கஷ்டப்பட்டுச் சுவரைக் கட்டினார். மாலையாகும் போது சுவர் ஒருவாறு கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

"அப்பாடா, ஒருவாறாகச் சுவரைக் கட்டி முடித்தாகி விட்டது. இனிப் போய் குறுணி நெல்லைக் கூலியாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று மகிழ்ச்சியுடன் தோட்டக்காரியைச் சந்திப்பதற்குப் புறப்படலானார். அப்போது..... சுவர் சிறிது சிறிதாக இடியத் தொடங்கியது. அதைப் பார்த்ததும் கம்பருக்கு அதிர்ச்சியும், துன்பமும் ஏற்பட்டது. உடனே அவர் மனம் நொந்து தான் சோழ மன்னனை விட்டு வந்ததையும், இங்கு தனது கவியின் சுவையை அறிபவர்கள் யாரும் இல்லையே என்றும் வேலி என்னும் அந்தத் தோட்டக்காரி தரும் கூலியான நெல்லைக் கொண்டு செல்லும் வரையாவது நிற்பாயாகச் சுவரே என்று துயரத்துடன் ஒரு கவிதை பாடினார்.
அந்தக் கவிதை வருமாறு,

"மற்கொண்ட திண்புயத்தான்
மாநகர் விட்டு இங்கு வந்தேன்
சொற்கொண்ட பாவின்
சுவை அறிவார் ஈங்கிலையே
விற்கொண்ட பிறை நுதலால்
வேலி தரும் கூலி
நெற்கொண்டு போமளவும்
நில்லாய் நெடுஞ்சுவரே"



இப்படிக் கம்பர் பாடினார். இதைக் கேட்டதும் அந்தச் சுவர்ப் பிசாசு "ஆஹா! இவர் மகா பண்டிதனாக இருக்கிறாரே. இவரிடம் நம் விளையாட்டைக் காட்டக்கூடாது" என்று பயந்து சுவரை இடிக்காமல் விட்டு விட்டது.

கம்பருக்கு ஒரே மகிழ்ச்சி உடனே புறப்பட்டு அந்தத் தோட்டக்காரியிடம் சென்றார். "சுவர் கட்டி முடித்தாகி விட்டது. என்னுடைய கூலியைத் தா" என்று கேட்டார். அவள் ஆச்சரியப்பட்டு
"எங்கே, பார்ப்போம்" என்று கம்பருடன் தோட்டத்துக்குச் சென்றார்.

அங்கே சுவர் அழகாகக் கட்டி முடிக்கப்பட்டிருந்ததைக் கண்டு அவள் மிகுந்த ஆச்சரியமடைந்தாள். யாராலும் செய்யமுடியாததை இவர் செய்து முடித்து விட்டாரே என்று மகிழ்ச்சியடைந்து "நீ யார்?" என்று கேட்டாள்.

அதற்குக் கம்பர் "நான் கூலியாள் தான்" என்று கூறினார்.

"இங்கேயே இருந்து வேலை செய். நான் உனக்கு நல்ல கூலி தருகிறேன்." என்று அவள் கூறினாள். அதற்குக் கம்பர்-

"அதெல்லாம் முடியாது. நான் போகவேண்டும். என் கூலியைத் தா" என்று வற்புறுத்தித் தன் கூலியை மட்டும் பெற்றுக் கொண்டு அங்கிருந்து போய்விட்டார்.

# ஐரோப்பாவிலேயே அதிகளவில் சிறுவர்கள் மரணமடைகின்றனர்!



ஐரோப்பாவில் உலகிலேயே முன்னேற்றமடைந்த பல நாடுகள் உள்ளன. எனினும், இப்படிப்பட்ட நாடுகளில் ஏராளமான சிறுவர்கள் தமது இளம் பருவத்திலேயே மரணமடைகின்றனர் என்ற அதிர்ச்சி தரத்தக்க தகவல் வெளியாகியுள்ளது.
அசுத்தமான நீர், சூழல் மாசடைதல், திடீர் விபத்துக்கள் ஆகிய காரணங்களினாலேயே மேற்படி மரணங்கள் சம்பவிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.
உலக சுகாதார அமைப்பின் கருத்தின் படி இவ்வாறு வருடமொன்றிற்கு 100,000 சிறுவர்கள் மரணமடைவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறான பொருளாதார விருத்தி மிக்க நாடுகளில் வீதி விபத்துக்கள் பல நடக்கின்றன. இது மட்டுமன்றி நீர் மாசடைதல், காரணமாகவும் சிறுவர்கள் பலர் மரணமடைவதாகவும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கை தெரிவிக்கின்றது.
அதிலும், குறிப்பாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வளி மாசடைதலின் காரணமாகவே சிறுவர்கள் அநேகர் மரணமடைவதாகத் தெரியவந்துள்ளது. அதாவது, தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகை மற்றும் அதனால் வெளியிடப்படும் காபன் ஆகியனவே இவ்வாறான தாக்கங்களை விளைவிக்கின்றன எனவும் கூறப்படுகின்றது.

## கண்ணின் மணியாய்...

அம்மா அப்பா ஆனவரே
அன்புத் தெய்வம் போன்றவரே
என்னைப் பெற்று வளர்த்தவரே
எல்லாம் தந்து காத்தவரே
சின்னக் கண்ணன் சொல்லுவதை,
சற்றே நின்று கேளுங்களேன்
படித்து நானும் ஆளாகி
வளர்ந்து நல்ல தொழிலாற்றி
கண்ணின் மணியாய் உங்களையே
என்றும் வைத்துக் காப்பேனே!

ரூபராணி-

# பொதிகை

*அடுத்த இதழில் இருந்து "பொதிகை" என்ற இலக்கியப்பகுதி இலக்கியச் செய்திகளைத் தாங்கி வெளிவரும். வாசகர் இப்பகுதிக்கு ஆக்கங்களை அனுப்பலாம். எந்த ஆக்கமும் "துணுக்குகள்" வடிவிலேயே இருக்க வேண்டும். கவிதைகள் எட்டு வரிகளுக்கு மேற்படலாகாது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல: 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2314714
பெக்ஸ்: 2314968

## குழி தோண்டிப் புதைக்கப்பட்டு வரும் தேசியக் கல்வி முறைமை.

நாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆயிரக்கணக்கான பாடசாலைகளை மூட வேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளதெனச் செய்திகள் வெளியாகி உள்ளன. தற்போது 3500 பாடசாலைகளை மூடி விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென்றும், எதிர்காலத்தில் இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு மொத்தம் 9,826 பாடசாலைகள் இருந்தன. எனினும் கடந்த வருடம் 32 புதிய பாடசாலைகள் திறக்கப் பட்டபோதும் இப்போது மொத்தம் 9,790 பாடசாலைகளே உள்ளன.

பாடசாலைகள் மூடப்படுவதற்கு முக்கிய காரணம் மாணவர் வரவில் ஏற்பட்ட வீழ்ச்சியே என்று கூறப்படுகின்றது. 2002 ஆம் ஆண்டு 4,026,236 ஆக இருந்த மொத்த மாணவர் தொகை கடந்த ஆண்டு 3,941,685 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. இதன் காரணமாக இன்று சுமார் 3,892 பாடசாலைகள் 150 மாணவர்களுக்கும் குறைந்த தொகையுடன் இயங்குவதாக அறியப்பட்டுள்ளது.

இலங்கையின் பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள இத்தகைய நிலை நாட்டின் தேசியக் கல்விக் கொள்கையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது. "நாட்டில் சகலருக்கும் சமமான கல்வி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது" என்று அரசாங்கம் வாய்கிழியக் கத்திய போதும், அந்தச் சமமான கல்வி எங்கே ஒளிந்திருக்கின்றது என்பதனைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது.

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சை என்பது, மாணவரின் அறிவுத் திறனைப் பரீட்சிப்பதற்கா? இல்லைப் பெரிய பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சையா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஒரு சாரார் தமது செல்வாக்கு, பணம் என்பவற்றைப் பயன்படுத்தித் தம் பிள்ளைகளைப் பெரிய பாடசாலைகளில் சேர்த்து விடுகின்றனர். பணம் மட்டுமே படைத்தவர் சர்வதேசப் பாடசாலைகளில் தம் தாய் மொழியை மறந்து ஆங்கிலக் கல்வி கற்கின்றனர். மேலும் பெரும் பணம் படைத்தோர் ஐரோப்பிய நாடுகளுக்கே சென்று கல்வி கற்கின்றனர். ஒன்றுமே இல்லாதோர் வளமற்ற பாடசாலைகள் என்று ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் கூரைகள் இன்றி, நிலத்தில் அமர்ந்து கல்வி கற்கின்றனர். வெறும் வெள்ளைச் சீருடை அணிந்தாலே சம கல்வி வாய்ப்பு வந்து விடும் என்பதே இவர்கள் வாதம்.

இவற்றையெல்லாம் விட மிகப் பெரிய அபாயம் நமது தேசியக் கல்விக் கொள்கை உலகில் மிக வேகமாக வளர்ச்சி பெற்று வரும் தொழில் நுட்பம், மற்றும் தொழில் துறைக்கேற்ப வளர்ச்சி பெறாமை ஆகும். இதன் காரணமாக அரச கல்வி முறைமைக்குச் சமாந்தரமாகத் தனியார் கல்வி முறையொன்று பூதாகரமாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இது விரைவிலேயே தேசியக் கல்வி முறையை விழுங்கி விடும். இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் சராசரி மக்களாகவே இருப்பார்கள்.

- ஆசிரியர்



## நான்கு வயதுக் குழந்தைக்குப் புதுவகைச் "செல்போன்"

அவுஸ்திரேலியாவின் மிகப் பெரிய தொலைபேசி நிறுவனமான டெல்ஸ்டார் தொலைபேசி நிறுவனம், சிறு பிள்ளைகள் பாவிக்கக் கூடிய 'செல்போன்' தொலைபேசிகளை அறிமுகம் செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

நான்கு வயதை எட்டிய பிள்ளைகளுக்கெனத் தயாரிக்கப்படவுள்ள இந்தச் 'செல்போன்' களில் அவர்களைக் கவரக் கூடிய வகையில் பல வர்ணங்களைக் கொண்டிருக்கும் மின்குமிழ்களும் பொருத்தப்பட்டிருக்கும்.
பிள்ளைகள் குறிப்பாக, பெற்றோருடன் அதிக நேரத்தைச் செலவிட வாய்ப்பில்லாத சிறுவர்கள், வேலைக்காரர்களின் பராமரிப்பில் இருக்கும் சிறுவர்கள் ஆகியோருக்கு இந்தச் 'செல்போன்' மிகவும் பயனுடையதாக இருக்கும்.

'செல்போனில்' ஒரே ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் நேரடியாகத் தமது பெற்றோரின் செல்போனுடன் இந்தச் சிறுவர்கள் தொடர்பு கொண்டு பேசக் கூடியவகையில் அமைக்கப்பட்டிருப்பதே இதன் சிறப்பம்சமாகும்!

## சிறுவர் கலாசாரப் பிரிவை அமைக்கும் யோசனை!

இலங்கையில் முதல் தடவையாகச் சிறுவர் கலாசாரப் பிரிவொன்றையும், அதனுடன் தொடர்புடைய சிறுவர் நிதியமொன்றையும் அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இது தொடர்பான அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி யோசனை முன்வைக்கப்படவுள்ளது.

இதற்குரிய அங்கீகாரம் கிடைக்கப் பெறும் பட்சத்தில் இதன் மூலம் சிறுவர் நலனைப் பேணுவதற்கு வழி பிறக்கும் எனவும், எதிர்பார்க்கப்படுகின்றது.

## திறந்த பல்கலைக்கழக அனுமதிக்கான நாடளாவிய கருத்தரங்குகள்!

திறந்த பல்கலைக்கழகத்தில் அடுத்த வருடத்திற்கான மாணவர்கள் அனுமதி குறித்தான விசேட கருத்தரங்குகள் நவம்பர் 20ம் திகதி முதல் நடைபெறவுள்ளன.
நாடளாவிய ரீதியில் அவ்வப் பிரதேச மட்டத்திலுள்ள மத்திய நிலையங்களில் இந்தக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கருத்தரங்குகள் நடைபெறவுள்ள திகதிகளும், இடங்களும் வருமாறு.....

நவம்பர் 20 - நுகேகொடை (நாவலை), ஹட்டன்.
நவம்பர் 21 - பண்டாரவளை,
நவம்பர் 26 - குருணாகல், கண்டி (பொல்கொல்ல), நுகேகொடை (நாவலை),
நவம்பர் 28 - ஹம்பாந்தோட்டை, அம்பலாங்கொடை, மாத்தறை (நுப்பே)
டிசம்பர் 02 - நுகேகொடை (நாவலை)
டிசம்பர் 05 - கேகாலை, யாழ்ப்பாணம், இரத்தினபுரி
டிசம்பர் 11 - அநுராதபுரம், நுகேகொடை (நாவலை)
டிசம்பர் 12 - கண்டி (பொல்கொல்ல), மட்டக்களப்பு, பொலன்னறுவை.
டிசம்பர் 19 - நுகேகொடை (நாவலை)


## மிருகக் காட்சிச் சாலையை இலவசமாகப் பார்வையிட ஒரு வாய்ப்பு!

பாடசாலை மாணவர்களின் பங்களிப்பின் கீழ் நாடு பூராகவும் பத்து லட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டமொன்றைச் சுற்றுப் புறச் சூழல் காப்பு அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.
மேற்படி திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் மரங்களைச் சிறந்த முறையில் பராமரிக்கும் மாணவர்களுக்குத் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை மற்றும் பின்னவலை யானைகள் சரணாலயம் ஆகியவற்றை இலவசமாகப் பார்வையிடுவதற்கான அனுமதி வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி, ஒவ்வொரு மாணவருக்கும் ஐந்து மரக்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டு அம்மரங்களைப் பராமரிக்கும் பொறுப்பும் வழங்கப்படும்.

## மாணவர்களுக்கு வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் அடங்கிய இலவசக் கைந்நூல்!

வீதிப் போக்குவரத்து விதிமுறைகள், மற்றும் வீதியில் பாதுகாப்பாக நடந்து செல்லுதல் ஆகியன தொடர்பில் மாணவர்களுக்கு அறிவூட்டும் விதமாக இலவசக் கைந்நூல் ஒன்றை வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு பிரசுரித்துள்ளது.
இக் கைந்நூல் நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது. வீதியில் நடந்து செல்லுதல்? பாதையைக் கடத்தல் ஆகியன உட்படச் சகல விதிமுறைகளும், ஆலோசனை வழிகாட்டல்களும் இந்தக் கைந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கழுகின் பிடியிலிருந்து உயிர் தப்பிய சிறுவன்!



கடற்கரைப் பகுதியில் பட்டம் விட்டுக் கொண்டிருந்த ஐந்தரை வயதுச் சிறுவன் ஒருவனைக் கழுகொன்று தூக்கிச் செல்ல முயன்றபோது, சிறுவனின் தாயார் அந்தக் கழுகினை விறகுக் கட்டையினால் தாக்கி சிறுவனை மீட்டுள்ளார். இச்சம்பவம் பேருவளை அம்பஸ்பொல எனும் இடத்தில் நடைபெற்றுள்ளது.
மேற்படி, கடற்கரைப் பகுதியில்தான் சிறுவனின் வசிப்பிடமும் உள்ளது. சம்பவ நாளன்று தந்தையுடன் இவன் பட்டம் விடச் சென்றிருந்தபோது, தாயும் கூடவே கடலில் மிதந்து வரும் விறகுக் கட்டைகளை சேகரித்துக் கொண்டிருந்தார். இவ்வேளை, கடல் பக்கமாக இருந்து எதிர்பாராத விதமாக அளவில் மிகவும் பெரிய கழுகொன்று இவர்களை நோக்கிப் பறந்து வந்து, சிறுவனைக் கால்கள் இரண்டில் பிடித்துக் கொண்டு சுமார் மூன்று அடி உயரத்தில் பறக்கத் தொடங்கியது. இதனை அவதானித்த சிறுவனின் தாயார் கையிலிருந்த விறகுக் கட்டையினால், கழுகினை ஓங்கிப் பல முறை தாக்கியதால், சிறுவனைச் சற்றுத் தொலைவிலுள்ள ஓடையொன்றில் போட்டு விட்டுக் கழுகுப் பறந்து சென்றது. இதனால் சிறுவன் சிறுகாயத்துடன் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தான்.
இந்தக் கழுகு சிறகை விரித்துப் பறக்கும் போது சுமார் 8 அடி அகலத்திற்கு அது காணப்பட்டதாகச் சிறுவனின் தாயார் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் நாடுகள்

SAARC

தென்னாசிய வலயத்திலுள்ள வறிய நாடுகளில் ஒன்றாகப் பூட்டானைக் குறிப்பிடலாம். பிரித்தானியச் செல்வாக்குக் காரணமாக இந்தியாவுடன் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடாக இதனைக் கூறலாம். 1865 ஆம் ஆண்டு இந்தியாவைக் குடியேற்ற நாடாக்கிய பிரித்தானியர் பூட்டானையும் சேர்த்து 1947 ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தனர். பின்னர் 1949 ஆம் ஆண்டு பூட்டான் இந்தியாவிடம் இருந்து விடுதலை பெற்று ஒரு சுதந்திர நாடாகியது.

## தரைத்தோற்றம்

பரப்பு : 47,000 சதுர கிலோமீற்றர்
நீண்ட நதி : டோர்சா
உயரமான இடம் : களுகன்திரி (7554 மீற்றர்)
காலநிலை : வெப்ப, குளிர் காலநிலைகள் இரண்டும் சேர்ந்த கலப்பான காலநிலை காணப்படுகின்றது. ஜனவரி மாதம் திம்புவினை அண்டிய பகுதிகளில் -4 செல்சியஸ் முதல் 16 செல்சியஸ் வரை வெப்பநிலை காணப்படும். வெப்பம் கூடிய ஜூலை மாதம் 15 செல்சியஸ் முதல் 25 செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும்.
வருட மழைவீழ்ச்சி : 650 மில்லி மீற்றர்

## சனத்தொகை

சனத்தொகை : 2,139,549 (2003)
வயதடிப்படையில் : 0-14 க்கு இடையில் 39.6%
15-64 க்கு இடையில் 56.4%
65 க்கு மேல் 4%
சனத்தொகை அதிகரிப்பு : 2.14%
பிறப்பு விகிதம் : 1000 பேருக்கு 34.82
இறப்பு விகிதம் : 1000 பேருக்கு 13.47
ஆண், பெண் விகிதம் : பெண் 1, ஆண் 1.07
ஆயுள் எதிர்பார்ப்பு : 53.58
எயிட்ஸ் நோயாளிகள் : ------
இனங்கள் : போதே 50%, நேபால் 35%
உள்ளூர் மற்றும் வெளியூர் இனங்கள் : 15%
சமயம் : லாமா பௌத்தர்கள் 75%, இந்திய மற்றும் நேபால் மதத்தவர்கள் 25%

மொழி : சொன்ஸாகா அரச மொழி. இவற்றை விடத்திபெத் மற்றும் நேபால் குலகோத்திரங்களின் மொழிகள் பேசப்படுகின்றன.
தொழிற்படை : 15 வயதிற்கு மேற்பட்டவர்கள் 42.2% த்தினர்

## நிர்வாகம்

அரசியலமைப்புப்படி பெயர் : பூட்டான், அரசு வழக்கிலுள்ள பெயர் : பூட்டான்
நிர்வாகத் தன்மை : மன்னர் ஆட்சி
தலை நகர் : திம்பு
நிர்வாக வலயம் : 18 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.
சுதந்திரம் பெற்ற தினம் : 1949 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி (இந்தியாவிடமிருந்து)
தேசிய தினம் : டிசம்பர் மாதம் 17ம் திகதி (சன்சுன் அரச வம்சம் ஆரம்பித்த தினம்)
அதிகாரம் : நாட்டின் தலைவர் மன்னரே. இற்றை வரைக்கும் நாட்டை ஆள்வது ஜக்மே சன்சுன் மன்னரே. அரசனால் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரவையால் அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.



அமைச்சரவையின் தலைவரால் நாடு நிர்வகிக்கப்படுகின்றது. இற்றை வரைக்கும் அமைச்சரவையின் தலைவராக லியோன்போ ஜிக்மே என்பவரே உள்ளார்.

## பொருளாதாரம்

உலகின் மிகச் சிறிய மற்றும் அபிவிருத்தியடையாத பொருளாதாரம் ஒன்றைக் கொண்டுள்ள நாடாக இதனைக் குறிப்பிடலாம். விவசாயம் மற்றும் மரத்தொழில் பிரதான தொழில்களாக உள்ளன. இந்தியாவுடனான நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியுள்ள ஒரு நாடாக இதனைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக





# பூட்டான்

இந்தியாவிடமிருந்து அதிக உதவிகள் கிடைக்கின்றன. உல்லாசப் பிரயாணத் தொழிலிலும் அதிக கவனத்தைக் காட்டி வருகின்றது.
தேறிய உள்நாட்டு உற்பத்தி : 2.7 பில்லியன் டொலர்
தேறிய உள்நாட்டு உற்பத்தி வேகம் : 7.7%
தனி நபருக்கான கொள்வனவு வேகம் : 1300 டொலர்
கைத்தொழில்கள் : சீமெந்து, மரப் பொருட்கள், பழங்கள், மதுசாரம் அடங்கிய பானங்கள், கல்சியம் காபைட்
கைத்தொழில் உற்பத்தி வேகம் : 9.3%
ஏற்றுமதி : 154 மில்லியன் டொலர் : (2000இல்)
ஏற்றுமதிப் பொருட்கள் : மின்சாரம், ஜிப்சம், பலகைகள், மரம், கைப்பணிப் பொருட்கள், சீமெந்து, பழவகைகள், வாசனைப் பொருட்கள், ஏலம்.
இறக்குமதி : 196 மில்லியன் டொலர்
இறக்குமதிப் பொருட்கள் : எரிபொருள் மற்றும் பெற்றோலிய எண்ணெய், தானியங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள், வாகனங்கள், துணி வகைகள், அரிசி.
நாணயம் : குல்டர்த் BTN
பெருந்தெருக்களின் அளவு : கிலோ மீற்றர் 3,690.
புகையிரதத் தெருக்களின் அளவு : 0
நீர் வழி : 0
விமான நிலையம் : 2 உண்டு. (சிறு விமான நிலையம் உட்பட)



# பனியில் நீராடும் ரஷ்யர்கள்!



மேற்குலக நாடுகளில் கடுங்குளிர் காலம் ஆரம்பமாகும் பருவம் இது. எங்கு பார்த்தாலும் பனிமழை பொழிவதையும், பனிமுட்டங்கள் நிறைந்திருப்பதையும் காணலாம். நீரைத் தொட்டாலே 'சில்' என்று குளிரெடுக்கும். ஆயினும் இத்தனை குளிரின் மத்தியிலும், ரஷ்ய நாட்டவர்கள் பனி படர்ந்த நீரில் குளிப்பதை ஒரு திருவிழாவாகக் கொண்டாடி வருகின்றனர் என்றால் ஆச்சரியந்தான் படுவீர்கள். இவ்வாறு இந்த நீரில் குளிப்பதனால் தீராத வியாதிகள் நீங்கி உடல் ஆரோக்கியம் பெற்று, நீண்ட ஆயுளுடன் வாழமுடியும் என்று அவர்கள் நம்புகின்றனர். இதனால் ஆண், பெண் வேறுபாடின்றி ரஷ்யர்கள் பலர் இந்தப் பனி நீராடல் திருவிழாவின் போது நீந்தி மகிழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் டீசல் என்ஜின் தயாரிப்பு!







17

ஜப்பானில் கார் உற்பத்தி நடைபெற்ற விதம் குறித்து நன்றாகத் தெரிந்தவர் போல் "டெட்ஸன்" விளங்கப்படுத்திக் கொண்டிருந்தது. கொரல்லாத் தம்பியும், பென்ஸும் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

"டெட்ஸன் தம்பி! நீங்கள் கூறுவதைப் பார்த்தால் நீங்கள் தான் ஜப்பானில் முதன் முதலாக கார் தயாரித்தவர்கள் என்று நினைக்கிறேன்" எனப் பென்ஸ் கூறியது.

"அப்படியென்றும் கூறமுடியாது. மிட்சுபிஷி நிறுவனமும் நம்முடன் கார் உற்பத்தியில் இறங்கியது என்பதை முன்னரும் நான்



கூறியிருக்கிறேன் அல்லவா....? அவர்கள் நமக்கு முன்னரே தொகைக் கணக்கில் கார் தயாரிக்கத் தொடங்கிவிட்டனர்" என டெட்ஸன் கூறியபோது,

"டெட்ஸன் அண்ணா.... 1918 ஆம் ஆண்டில் என்ன நடந்தது....?" என்று கொரல்லாத் தம்பி கேட்டது.

"1918 ஆம் ஆண்டில், ஜப்பான் அரசாங்கம், கார் உற்பத்தியாளர்களுக்கு உயர்ந்த அளவில் அனுகூலங்களைப் பெறுவதற்கு வசதிகளை வழங்க தீர்மானித்துள்ளது.
போர் காலத்திற்கு உகந்த வாகனங்களைத் தயாரிப்பதற்கே அதிக அளவில் இதன் போது ஊக்கமளிக்கப்பட்டது. 1904-1905 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ரஷ்யாவிற்கு எதிராக நடைபெற்ற யுத்தத்திற்கு பயன்படுத்தத் தக்க வாகனங்களைத் தயாரிப்பதில் அதிகாரிகள் அதிக ஆர்வம் காட்டினர். இதனையடுத்துத் தான் யுத்தத்திற்கு வாகனங்கள் எந்தளவிற்கு பயன்தரத்தக்கன என்பது உணரப்பட்டது. எப்படியோ இந்தத் தேவையின் காரணமாக, கார் உற்பத்தியாளர்களுக்கு கூடிய வருவாயை ஈட்ட முடிந்தது என்பது மறுக்க முடியாததே. இதனால் அநேகமானோர் கார் உற்பத்தியை அதிகரித்துக் கொண்டனர்." என்றது டெட்ஸன்.

"இந்தக் காலத்தில் தயாரிக்கப்பட்ட புதிய வாகனங்கள் எவை?" இப்படி கொரல்லாத் தம்பி கேள்வி எழுப்பியது.

"1918 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மிட்சுபிஷி நிறுவனத்தின் "டி" எனப்படும் டிரக் வண்டியை குறிப்பிடலாம். இதுதான் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட முதலாவது "டிரக்" வண்டியாகும். இதன் பின்னர் ஏராளமானோர் ஜப்பானில் டிரக் தயாரிப்பில் இறங்கினர்."

"டெட்ஸன் தம்பி....! அந்தக் காலகட்டத்தின் போது, ஜப்பானில் மிகப் பெரும் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டுள்ளேன்." எனப் பென்ஸ் அண்ணா கூறியது.

"ஆமாம், அவ்வாறான பூமியதிர்ச்சி ஏற்பட்டது தான்..... இந்த பாரிய பூமி அதிர்ச்சியினால் ஜப்பானிலுள்ள புகையிரத தண்டவாளங்கள் பல அழிவு நிலைக்கு ஆளாகின. இதனால் போக்குவரத்தை இது பெரிதும் பாதித்தது. இதன் காரணமாக சாதாரண வாகனங்களின் தேவை அதிகரித்ததால் வாகனங்களின் தயாரிப்பு வேகமாக அதிகரித்தது. ஆனால் ஜப்பானியர்கள் இதில் அதிக பயனைப் பெறவில்லை. பென்ஸ் அண்ணாவின் ஆட்களே இதன் பயனை அதிகளவில் பெற்றிருந்தனர்." இவ்வாறு டெட்ஸன் கூறியதுதான் தாமதம்....

"என்னண்ணா..... அது என்ன கதை....?" எனக் கொரல்லாத் தம்பி பரபரப்புடன் கேட்டது.

"சொல்கிறேன்..... கேட்டுக் கொள்ளுங்கள், அந்த காலகட்டத்தில், அதிக அளவில் வாகன உற்பத்திக்கான தேவை இருந்த போதிலும் ஜப்பானியக் கார் உற்பத்தியாளர்களால் தேவைக்கு ஏற்ற கணக்கில் கார்களை உற்பத்தி செய்ய முடியாமல் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அதாவது 1925 ஆம் ஆண்டில் 'போர்ட்' வாகன நிறுவனம் யொக்கோஹாமா நகரில் தனது நிறுவனத்தை அமைத்தது.
இதனையடுத்து, இரண்டு வருடங்களின் பின்னர் அமெரிக்காவின் "ஜெனரல் மோட்டர்ஸ்" நிறுவனத்தின் கார் உற்பத்தித் தொழிற்சாலையொன்றும் 'யொக்கோஹாமா' நிறுவனத்தின் தொழிற்சாலையொன்றும் 'யொக்கோஹாமா' நகரில் நிறுவப்பட்டது. இவர்கள் தமது கார் உற்பத்தியை விரைவு படுத்தியமையால் இதன் பலனையும் அவர்களால் நன்றாகவே அனுபவிக்க முடிந்தது."

"அண்ணா..... அந்தக் காலகட்டத்தில் ஜப்பான் வாகனங்கள் தயாரிக்கப்படவே இல்லையா?" என கொரல்லா குறுக்கிட்டுக் கேட்டதற்கு, பதிலளித்த டெட்ஸன்-,

"அப்படி என்றில்லை.... ஜப்பான் வாகனங்களும் தயாரிக்கப்பட்டன தான். இந்தக் காலகட்டத்தில் தான் 'டெட்' நிறுவனம், "ஜிட்சுயோ.. ஜிதோஸா" என்ற கார் நிறுவனத்துடன் கூட்டிணைந்து செயற்பட்டது. இந்த நாட்டு நிறுவனம் 'லிலா' பெயரில் வாகனமொன்றைத் தயாரித்தது. இதில் பங்கு கொண்ட முக்கிய பொறியியலாளர்கள் தான் அமெரிக்கரான வில்லியம் ஆர்.கோர் ஹேம் என்பவராகும். நாளடைவில் 'டெட்' நிறுவனத்தின் வெற்றிக்கு இவரே காரணகர்த்தாவாகவும் திகழ்ந்தார்.

இவரது மேற்பார்வையின் கீழ் 1930 ஆம் ஆண்டில் "டெட் 91" என்ற புதியதொரு வாகனத்தைச் சந்தைக்கு 'டெட்' நிறுவனம் அறிமுகப்படுத்தியது. இந்த அறிமுகத்தின் காரணமாக, "டொபாட்டோ இமோனா" என்ற கார் உற்பத்தி நிறுவனத்துடனும் "டெட்" நிறுவனம் இணைந்து கொண்டது. யொகுஸிக்கே அயுக்காவா என்பவரே இதற்கு பொறுப்பாளராக இருந்தார். இவர் வில்லியம் அவர்களின் நெருக்கமான நண்பருமாவார். இவர்கள் இருவரும் சேர்ந்து ஜப்பானுக்குப் பொருத்தமான காரொன்றைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்கினர்." எனக் கூறிய டெட்ஸன் கொரல்லாவையும், பென்ஸையும் உற்றுப் பார்த்தது. அப்போது கொரல்லாத் தம்பி,

"இன்னும் சொல்லுங்கள்..... ம்...." என்றது.

டெட்ஸன் பேச்சைத் தொடர்ந்தது. "சிறந்த காரொன்றைத் தயாரிக்கும் முயற்சிக்காக உரிய விபரங்களைத் திரட்டுவதற்காக வில்லியம் அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்றார். இதே சமவேளையில், அயுக்காவா அவர்கள் வாகன தொழிற்சாலையை வழி நடத்திச் சென்றார்.

இதே வேளை, மற்றுமொரு பிரச்சினை தலைதூக்கியது. "DATSON" என்ற ஆங்கிலப் பெயரைப் பயன்படுத்தினால் ஜப்பான் பாஷையில் அது "பணத்தை விரயமாக்கல்" என்ற அர்த்தத்தை தருவதாக இருந்தது. எனவே, இதில் சிறுமாற்றத்தை உருவாக்கி, 'SON' என்ற பின் பாதியை சூரியனை குறிக்கும் விதமாக 'SUN' என மாற்றி 'DATSUN' என பெயரிடப்பட்டது" இவ்வாறு தனது பெயர் உருவான விதம் குறித்து டெட்ஸன் விளக்கிக் கூறியது.


"இப்படித்தான் டெட்ஸன் அண்ணாவுக்குப் பெயர் வைக்கப்பட்டது தானே...." எனக் கொரல்லாத் தம்பி கேட்டது.

"ஆம்..... ஆம்... 1931 ஆம் ஆண்டில் நல்லதொரு சம்பவம் நடந்தது. ஜப்பானில் முதலாவது டீசல் என்ஜின் தயாரிக்கப்பட்ட சம்பவமே அது. 'மிட்சுபிஷி' நிறுவனமே இதனைத் தயாரித்தது. இந்த என்ஜினைக் கொண்டு மிட்சுபிஷி நிறுவனத்தினால் பஸ்களையும் தயாரிக்க முடிந்தது. "பீ 46" என்ற ரகத்திலான பஸ்ஸே இவ்வாறு முதலாவதாகத் தயாரிக்கப்பட்டது. காலப்போக்கில் 'புஸோ' என்ற ரக பஸ்ஸைத் தயாரிப்பதற்கும் இதுவே முன்னோடி வாகனமாகவும் அமைந்தது." என்றது டெட்ஸன்.

"தம்பி அந்தக் காலத்தில் முதல் தர 'டெட்ஸன்' வாகனமொன்று தயாரிக்கப்பட்டதல்லவா?" என பென்ஸ் கேட்டது.

"சரியாகச் சொன்னீர்கள். 1932 ஆம் ஆண்டில் "டெட்ஸன் 10", டெட்ஸன் 11" என்ற வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதில் "டெட்ஸன் 11" என்ற ரக வாகனமே சிறப்பான வாகனமாக அமைந்தது. இதுவே சிறந்த ஜப்பானிய வாகனமாகவும் ஜப்பானில் அடையாளப்படுத்தப்பட்டது.

*(உரையாடல் தொடரும்....)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு முதல் இறப்பு வரை

# பிறப்பு அத்தா

**இலங்கையில் பிறப்பு அத்தாட்சிப் பதிவு முறையினை ஒல்லாந்தர்களே அமுல்படுத்தினர். ஆனால் காலப்போக்கில் பதிவாளர் திணைக்கள அலுவலகம் நிறுவப்பட்ட பின்னரே முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.**

> **1975 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறப்புச் சான்றிதழில் இரு பிரதிகள் மட்டுமே காணப்பட்டன. இதில் ஒரு பிரதி மாளிகாவத்தையில் அமைந்துள்ள மத்திய கச்சேரியிலும் மற்றது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் வைக்கப்பட்டன. எனினும் தற்போது பிறப்புச் சான்றிதழுக்கு மூன்று பிரதிகள் உள்ளன**

உலகில் ஒரு நாளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பிறக்கின்றனர். இந்தப் பிறப்புப் பற்றி நிரூபிப்பதற்கு ஆதாரம் தேவைப்படுகின்றது. ஒருவர் யார்? என்பது பற்றி அறிந்து கொள்வதற்கே இந்தப் பிறப்புப் பற்றிய விபரம் தேவைப்படுகின்றது. இதற்காகவே அரச சட்டப்படி பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தயாரிக்கப்படுகின்றது. அந்த வகையில் ஒரு குழந்தையின் பிறப்பைப் பதிவு செய்து கொள்ள வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையும், பொறுப்பும் ஆகும்.

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்றால் என்ன?

உங்கள் பிறந்த திகதி, பிறந்த இடம், உங்கள் பெயர், பெற்றோர் பற்றிய விபரம் போன்றவற்றுடன் பிறப்புச் சான்றிதழ் தயார் செய்யப்படுகின்றது. பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழ் ஒருவர் பிறந்த இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திலேயே தயாரிக்கப்படுகின்றது. மாவட்ட மேலதிகப் பதிவாளரினாலேயே இதற்கான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன.

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் வரலாறு

இலங்கையில் இருக்கும் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் முறை முற்காலத்தில் இருக்கவில்லை. சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியதையடுத்தே இந்த நடைமுறை வழக்கத்திற்கு வந்தது. ஆனால் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் பிறப்பு, இறப்பு, திருமணம் என்பனவற்றைப் பதிவு செய்யும் வழக்கம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. பிரித்தானிய ஆட்சிக் காலத்துக்கு முன்னர் இருந்த ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் பிறப்பு, திருமணம், மரணம் என்பனவற்றைப் பதிவு செய்யும் வழக்கம் இருந்தது. ஆனால் அந்தக் காலத்தில் செல்வந்தர்கள், பிரபுக்கள் ஆகியோரது குடும்பங்களில் உள்ளவர்கள் மட்டுமே பதிவு செய்யும் முறை இருந்தது. இதற்கெனக் கொழும்பு ஆட்டுப்பட்டித்தெரு, காலி, யாழ்ப்பாணம், மாத்தறை ஆகிய நகரங்களில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் பதிவு செய்யும் காரியாலயங்கள் இயங்கின. இவ்வாறான பதிவு செய்யும் நடவடிக்கைகள் திருப்திகரமான வகையில் மேற்கொள்ளப்படாததால், 1822 ஆம் ஆண்டில் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் படி கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த உள்ளூர் வாசிகளின் மரணம், பிறப்பு, திருமணம் என்பன பதிவு செய்யப்பட்டன. இந்தக் கடமைகள் இன்று போல் நிரந்தரப் பதிவாளர்களிடம் அன்று கையளிக்கப்படவில்லை. பாடசாலை ஆசிரியர்கள் உத்தியோகப் பற்றற்ற பதிவாளர்களாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வந்தனர்.




பின்பு 1848 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தின் படி மத்திய பிரதேசம் மற்றும் முஸ்லிம் மக்களின் இறப்பு, பிறப்பு, திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 1849ல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் படி கிறிஸ்தவர்களின் பிறப்பு, இறப்பு, திருமண நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டன.

## பதிவாளரிடம் ஒப்படைப்பு

இவ்வாறு பல மாற்றங்களின் பின்னர் 1967ம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் இலங்கையில் வசிக்கும் அனைத்துப் பிரஜைகளினதும் பிறப்பு, இறப்பு, மரண நிகழ்வுகளைப் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பமானது. இன்று எமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பதிவு செய்யும் பதிவாளர் நாயகம் திணைக்களம் 1964ல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரதான நோக்கம் காணிகளைப் பதிவு செய்வதே ஆகும். எனினும் பிறப்பு, இறப்பு, மரண நிகழ்வுப் பதிவுகள் இத்திணைக்களத்திடம் 1967ல் விசேட சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டன.

## பிறப்பைப் பதிவு செய்தலைக் கட்டாயமாக்குதல்

இன்று போல் பிறப்பை உறுதிப்படுத்தும் அவசியம் முன்பு இருக்கவில்லை. அரசாங்கம் இது தொடர்பாக மக்களை வலியுறுத்தவும் இல்லை. எனினும், பிறப்பு, இறப்பு, திருமண நிகழ்வுகளைப் பதிவு செய்வது சட்டரீதியாக முக்கியமானது என்பதால் சட்ட நடவடிக்கைகள் மூலம் இவற்றைப் பதிவு செய்வது கட்டாய நடவடிக்கையாக்கப்பட்டது. இதனால் இலங்கையில் வசிக்கும் அனைத்துப் பிரஜைகளும் இது குறித்து அக்கறை செலுத்தினர். பிறப்புச் சான்றிதழில் உள்ள விபரங்கள் போதுமானதாக இல்லாததால் 1975ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலம் மேலும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டன.

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் மாற்றங்கள்

முன்பு பெயர், பெற்றோரின் விபரங்கள் மட்டுமே பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. 1975 ன் பின்னர் மேலும் பல விபரங்கள் உள்ளடக்கப்பட்டன. 1975 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறப்புச் சான்றிதழில் இரு பிரதிகள் மட்டுமே காணப்பட்டன. இதில் ஒரு பிரதி மாளிகாவத்தையில் அமைந்துள்ள மத்திய கச்சேரியில் வைக்கப்பட்டும். மற்றவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டன. எனினும் தற்போது பிறப்புச் சான்றிதழுக்கு மூன்று பிரதிகள் உள்ளன. ஒரு பிரதி பிரதேச செயலக அலுவலகத்திலும், மற்றது மத்திய கச்சேரியிலும் வைக்கப்படும். அடுத்த பிரதி பிறப்புச் சான்றிதழுக்கு உரியவரிடம் கையளிக்கப்படும்.


## பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழை எப்படித் தயாரிப்பது?

***மருத்துவமனையில் பிறந்தால்.....**

மருத்துவமனையில் பிறப்பு நிகழ்ந்தால் மருத்துவமனையில் கடமை புரியும் மருத்துவப் பதிவாளர் பதிவு செய்து மருத்துவமனை அறிக்கையை வெளியிடுவார். அதில் பிறப்புச் சம்பந்தமான அனைத்து விடயங்களும் உள்ளடங்கியிருக்கும். அதன் விபரங்களின் படி பிரதேச செயலகத்தில் இருக்கும் பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும். அதன் பின் பிரதேசச் செயலக அலுவலகத்தில் கடமை புரியும் மேலதிக மாவட்ட பதிவாளரிடம் அதனை கையளிக்க வேண்டும். அப்பொழுது அவர் பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழை வெளியிடுவார்.


***வீட்டில் பிறந்தால்.....**

வீட்டில் பிறப்பு நிகழ்ந்தால் அது குறித்துக் கிராமசேவகரிடம் அறிவிக்க வேண்டும். அவரிடம் இருக்கும் அறிக்கையை நிரப்பிப் பெற்றோர் கையொப்பத்துடன் பிரதேசத்தின் பதிவாளருக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்முடனிருக்கும் ...ாட்சிப் பத்திரம்



பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பதிவு செய்யும் பதிவாளர் நாயகம் திணைக்களம் 1964ல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரதான நோக்கம் காணிகளைப் பதிவு செய்வதே ஆகும். எனினும் பிறப்பு, இறப்பு, மரண நிகழ்வுப் பதிவுகள் இத்திணைக்களத்திடம் 1967ல் விசேட சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டன.

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

### பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களில் அடங்கியுள்ள விபரங்கள் இவையாகும்

1. பிறப்பு இல
2. மாவட்டம்
3. பிரிவு
4. பிறந்த திகதி/பிறந்த இடம்
5. பெயர்
6. ஆண், பெண் பால்
7. தந்தையின் விபரங்கள் முழுப்பெயர்
   பிறந்த திகதி
   பிறந்த இடம்
   இனம்
   தொழில்
8. தாயின் விபரம் முழுப்பெயர்
   பிறந்த திகதி
   பிறந்த இடம்
   இனம்
   தொழில்
9. பெற்றோர் திருமணமானவர்களா?
10. பாட்டன் இலங்கையில் பிறந்தவராயின் பாட்டன் பெயர் பிறந்த ஆண்டும், இடமும்
11. தந்தை இலங்கையில் பிறக்காமல் கொள்ளுப்பாட்டன் இலங்கையில் பிறந்திருந்தால் கொள்ளுப்பாட்டன் முழுப்பெயர் பிறந்த ஆண்டு, பிறந்த இடம்
12. பிறப்பை அறியப்படுத்தியவர் விபரம்
13. கையொப்பம்
14. பிறப்பைப் பதிவு செய்த தினம்
15. செயலாளர் ஒப்பம்
16. திகதி
17. பதிவாளர் ஒப்பம்
18. மாவட்டச் செயலாளர் ஒப்பம்

இந்தப் பத்திரத்தின் விபரங்களை மாற்றுவது சட்டரீதியான குற்றமாகும்

அனுப்ப வேண்டும். கிராமசேவகரின் அறிக்கையின் பிரகாரம் பதிவாளர் பிறப்புச் சான்றிதழை வெளியிடுவார்.

## பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழ் தேவையான சந்தர்ப்பங்கள்

பிறப்புச் சான்றிதழில் ஒருவரின் அனைத்துத் தனிப்பட்ட விபரங்களும் உள்ளடங்கியிருக்கும். இதனால் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளின் போது தமது தகவல்களை நிரூபிக்கப் பிறப்புச் சான்றிதழ் அவசியமான பத்திரமாகும்.

1 தேசிய அடையாள அட்டையைப் பெற
2 கடவுச்சீட்டைப் பெற
3 பாடசலையில் சேர்க்க
4 தொழிலுக்குச் செல்ல

## பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழ் இல்லாவிட்டால்

முதலாவதாகப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லை என்பதைப் பிரதேச செயலக அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். இது தொடர்பாக அதிகாரிகள் விசாரணைகள் நடத்துவார்கள். இதற்கு மருத்துவமனை விபர அறிக்கையும், பெற்றோரின் திருமண அத்தாட்சிப்பத்திரமும் தேவைப்படும். இவற்றைப் பரிசீலித்தே பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும்.


எழுத்து மூலமான சாட்சியங்களைச் சமர்ப்பிக்க முடியாதவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ் வழங்

கப்பட மாட்டாது. எனினும், இவர்களுக்கு "அனுமானித்த வயது அத்தாட்சிப் பத்திரம்" எனும் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றைக் கல்வி நடவடிக்கைகளுக்கும், வேலை வாய்ப்புகளுக்கும் பயன்படுத்த முடியும்.

**பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காணாமல் போனால்....**

பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் காணாமல் அல்லது பழுதடைந்து விட்டால் உரிய முத்திரைக் கட்டணத்தைச் செலுத்திப் பிரதேச செயலகத்தில் அதன் பிரதியைப் பெற்றுக்கொள்ள இயலும். இதன்படி தேசிய அடையாள அட்டையைப் போன்று பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் பாதுகாப்பது அவசியமாகும்.

**விபரங்கள் அறிய வேண்டுமாகில்-**
உதவி பதிவாளர் நாயகம்
பதிவாளர் நாயகம் அலுவலகம்
கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புச் செல்வங்களே!

எமது அறிவியற் கலசத்தில் இங்கு 15 வது பருக்கையாக அறிவியல் மேதையாகத் திகழ்ந்த மாதர் மணியான மேடம் மேரி கியூரி அம்மையார் பற்றிப் பார்ப்போம். இப்பெண்மணி தன் வாழ்நாளில் சந்தித்த தடங்கல்களுக்கும், இன்னல்களுக்குமோ கணக்கில்லை. அவற்றை எல்லாம் முறியடித்து, கொண்ட கொள்கையிலும், முயற்சிகளிலும் வெற்றி கண்டு அறிவியல் உலகில் என்றும் மங்காத் தீபமானார். அவர் முயற்சியும் திடசித்தமும் எமக்கோர் உன்னதமான பாடநூல்.

அவர் பற்றி இங்கு வாசிப்போமா?

நன்றி.

அநு.வை.நா.

பருக்கை : 15



# அறிவியற் கலசம்

அநு.வை. நாகராஜன்

இப்பொழுதெல்லாம் பெண்ணின் பெருமையை வானளாவப் புகழ்கிறோம். ஆனால் கடந்த 20ம் நூற்றாண்டுக்கு முன்னர் பெண்ணை வீட்டுக்குள் பூட்டி வைத்து வேடிக்கை பார்த்தோம். அறிவியல் உலகில் பெண்களும் மாமேதைகளாக விளங்கி அரிய பெரிய புலமைகளையும் அற்புதங்களையும் படைத்து உலகை வளமூட்டி இருக்கிறார்கள்.

அந்த வகையில் அறிவியல் உலகில் அறிஞர் வரிசையில் மாமேதையாக மேடம் மேரி கியூரி அம்மையார், விண்தாரகைகள் நடுவில் தண்மதியாய் விளங்கினார்.

கிழக்காயினும், மேற்காயினும், எத்திசையாயினும் பெண் குலம் பல்வழிகளிலும் பாதிக்கப்பட்டே வந்திருக்கின்றது. குறிப்பாகப் பெண் கல்வியில் 20ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை பெண்ணினம் மிகவும் பின் தங்கியே இருந்துள்ளது. பெண்ணின் பெருமை - பெண்ணழகில் - பெண்ணைக் கவிதைகளிலும், கதைகளிலும் மட்டுமே வடித்து மகிழ்ந்த காலம் மலையேறத் தொடங்கப் புதிய காலம் ஒன்று விடிவெள்ளியென முகிழ்ந்தது. இதற்கு வழிவகுத்த மேற்குலக வனிதையர் வரிசையில் 'விளக்கேந்தி' மாநுடப் பணி புரிந்த ஹெலன் அம்மையார், பாதரசம் (Mercury) என்ற புதுமைப் பொருள் கண்டுபிடித்த மேடம் மேரி கியூரி போன்ற ஒரு சில பெண் திலகங்களின் பெருமைசால் புரட்சிகள், பெண்ணின் பெருமையை உச்சிமேல் வைத்துப் பூஜிக்கத்தக்கதாக உள்ளன.

மேடம் கியூரி அம்மையாரின் வாழ்வும், வளமும் அறிவியல் உலகுக்கோர் ஒளிச்சுடர்! அவர் வாழ்ந்த சமூகத்தினின்று கிளர்ந்தெழுந்து வந்த தடைகள் அனைத்தையும் தனியொருத்தியாக நின்று அறுத் தெறிந்து வீறுநடை போட்டுச் செயற்பட்ட அம்மையாரின் பெருமையைப் பேசின் நா இனிக்கும், மனம் மகிழும், தாய்க்குல மாண்பு பொங்கி எழும்.

# அறிவியல் உலகில் "றேடியம்" அற்புதக் கண்டுபிடிப்பு!

போலந்து நாட்டின் வார்சோ நகரில் 1867ம் ஆண்டு நவம்பர் 07ம் நாளன்று ஓர் ஏழை விவசாயப் பெற்றோரின் மகளாகப் பிறந்தவளே மான்யா ஸ்க்லோ டௌஸ்கா. பெற்றோர் விவசாயப் பரம்பரையில் வந்தவராயினும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாக இருந்தனர். தந்தை வார்சோ நகரில் ஓர் உயர் கல்லூரியின் கணித, பௌதீக ஆசிரியராகத் தொழில் புரிந்தார். அதே போல், தாயாரும், பியானோ வாத்தியத்தில் ஒரு வித்தகியாக இருந்து, வீட்டில் பியானோ இசை போதிக்கும் இசையாசிரியையாக இருந்தார்.





மான்யாவின் தந்தை சுதந்திர வேட்கை மிகுந்தவர். தன் தாய் நாடு, ரஷ்ய ஜார் மன்னனின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்று புரட்சிக் கொடி ஏந்தியவர். அதனால் தொழில் இழந்து, குடும்பத்தை நடத்த முடியாது கஷ்டமும் சொல்லவொண்ணாத் துன்பமும் அடைந்தார்.

இந்நிலையில் தான் பத்து வயது நிறையாப் பாலகி மான்யா, தன் தாயைக் காச நோயில் இழந்தாள். தன் தந்தையின் பாதுகாப்பிலும், புரட்சிகர உணர்விலும் படித்து முன்னேறிய மான்யா தன் உயர் கல்வியை மேலும் திறமையாக முடித்துக் கொள்ள முடியாது தத்தளித்தாள். தன் முயற்சியைச் செவ்வனே முடித்து வெற்றி காணாததால், தொழில் தேடும் முயற்சியில், பல மாடிப்படிகள் ஏறி இறங்கினாள். பலன் கிடைக்கவில்லை. ஈற்றில், ஓர் ரஷ்யப் பிரமுகர் வீட்டில் குழந்தை பராமரிக்கும் தாதியாகவும், ஆசிரியராகவும் தொழில் செய்தாள் மான்யா. அதனையும் இடையில் இழந்து வேறொரு வீட்டில் பணிப் பெண்ணாக அமர்ந்தாள். அங்கும் நீண்ட நாள் நீடித்து நிற்க முடியவில்லை. அந்தப் பெரிய வீட்டு எசமானனின் பல்கலைக்கழக மகன் இவள் மீது காதல் வயப்பட்டான். அவளும் தன் திக்கற்ற வாழ்வுக்கு அவன் நல்ல கணவனாகத் துணை நிற்பான் என நம்பினாள். ஆனால் அந்தப் பெரிய வீட்டுக் காதல் நிறைவேறாமல் ஏமாந்தாள். அதனால் தொழிலையும் இழந்து அங்கிருந்து வெளியேற வேண்டியதாயிற்று.

மான்யா தன் காதல், தோல்வி அடைந்ததே என்று கவலை கொள்ளவில்லை! தொழில் போய்விட்டதே என்றும் கவலை கொள்ளவில்லை. பதிலாக, மன வைராக்கியத்துடன் வாழ முனைந்தாள். முன்னரிலும் முனைப்பாகச் செயற்பட முன்னின்றாள். மான்யா, தன் பெயரையே மாற்றி, மேரி கியூரி என்ற புதிய பெயரோடு சேர்பான் பல்கலைக் கழகத்தில் அறிவியல் கற்கைப் படிப்புக்குத் தன்னைப் பதிந்து கொண்டு படித்தாள். கணிதம், இரசாயனம், பௌதீகம் போன்ற பாடங்களுடன் கவிதை, இசை போன்ற கவின்கலைப் பாடங்களையும் படித்து முதுமானிப் பட்டம் பெற்றாள். காதல் வாழ்வில் தோல்வி கண்ட போதிலும், புத்துலகச் சிற்பியான மேரி கியூரி வாழ்வின் பல படிகளில் எடுத்தடி வைத்து முன்னேறத் துடித்தாள்.

அவ்வேளையில் தான், அறிவியல் மேதையும், 'அழுத்த மின்சாரம்' எனும் புதிய தத்துவத்தை அறிவியலில் அறிமுகஞ் செய்தவருமான பியோர் கியூரி என்பவரைக் காதலித்தாள் மேரி. காதல் ரணத்தால் புண்பட்டுப் போயிருந்த மேரி, பியோர் கியூரியின் சந்திப்பால் மனத் தெளிவும் புதிய வாழ்வும் கண்டாள். கருத்தொருமித்து ஆதரவு கண்ட இருவரும் கடிமணம் புரிந்து, அன்றிலும், பேடுமாய் அறிவியல் வானில் இணைபிரியாப் புறாக்களாயினர்.

ஏற்கனவே, அறிவியலாளர்களால் கண்டு பிடித்துப் பரிசோதனை நிலையில் இருந்த 'எக்ஸ்ரே' (X'Ray) 'பிட்ஸ் பிலெண்ட்' பற்றி மேரி கியூரி தம்பதிகள் ஆராயத் தொடங்கினர். இதற்காக, இருவரும் பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியும் இருந்தது. குறிப்பாக, 'பிட்ஸ் பிலெண்ட்' எனும் தாதுப்பொருள் ஒஸ்திரியா எனும் நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் பெற முடியாதிருந்தது. அதை மிகவும் சிரமப்பட்டு, பெற்று ஆராய்ந்து 'பிஸ்மத்' எனும் புதிய பொருள் ஒன்றையும் அதிலிருந்து கண்டு பிடித்தார்கள். இது ஒரு கூட்டுப் பொருள். யுரேனியத்தைப் போல் 300 மடங்கு சுறுசுறுப்பும் ஆற்றலும் மிக்கது. இதில் வேறு பொருள்களும் இருக்கும் என்று மேரி, தொடர்ந்து ஆராய்ந்தார். அவர் முயற்சி வீண் போகவில்லை. 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழிக்கிணங்க, மேரி கியூரி புதிய கண்டுபிடிப்பான 'பொலீனியம்' என்ற புதிய பொருளைக் கண்டு உலகுக்கு அறிமுகஞ் செய்தார். மேரியின் தாயகம் போலந்து. அதனால் தன் தாய் நாட்டுப் பற்று மிக்கவராக இருந்தார். அதன் காரணமாக, தான் கண்டுபிடித்த புதிய பொருளுக்கு 'பொலீனியம்' என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்.

பிஸ்மத்திலிருந்து பொலீனியம் கண்டுபிடித்த பின்னும் எஞ்சிய எச்சத்தில் வேறு பொருள்கள் இருக்கும் என்று தனது ஆய்வை நடத்தினார் மேரி. அது வீண் போகவில்லை. அதன் பயனாக, அதி சுறுசுறுப்பும் ஆற்றலும் கொண்ட 'றேடியம்' என்ற புதிய பொருளைக் கண்டுபிடித்தார். அதுவே நாம் கூறும் பாதரசம் என்ற உலோகம். இது ஒரு விசித்திரமான, வித்தியாசமான உலோகம். இதில் யுரேனியத்தின் கதிர்வீச்சு ஆற்றலைப் போல் பத்து லட்சம் (பிலியன்) மடங்கு கதிர்வீச்சு ஆற்றல் உண்டு. மேரி அம்மையார். கண்டுபிடித்த 'றேடியம் வீச்சுக் கதிர்கள்' வித்துக்கள் முளை கொள்ள முடியா பக்ரீயாக்களையும், சின்னஞ் சிறிய நுண் கிருமிகளையும் கொல்ல வல்லதாகவும் இருந்தன. இந்தக் கதிர் வீச்சுகள் உடலின் இழையங்களை (Tissues) அழிக்க வல்லவையாக இருந்தன. ஆதலால், புற்று நோய்ச் சிகிச்சைக்குப் பெருந் துணை புரிந்தது.

மேலும், வேறு சரும ரோகங்களையும் குணப்படுத்த றேடியம் பயன்படுத்த உதவியது. மேரி அம்மையார் இதனைக் கண்டுபிடிக்க அரும்பாடு பட்டார். இவருக்கு ஊன்று கோல்

(தொடர்ச்சி 16ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரத்துவத்தையும், சம தர்மத்தையும் மலரச் செய்யும் "ஈத் பெருநாள்"

இஸ்லாமிய ஷரியத்தின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு அல்லாஹுத்தஆலாவால் வழங்கப்பட்ட இரு பெருநாட்களில் ஒன்றே 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாளாகும். ஒரு மாதகாலமாக நோன்பிருந்த முஸ்லிம்கள் அல்லாஹுத்த ஆலாவின் கட்டளையை ஏற்று அதனை நிறைவேற்றிய பின் பெருநாளைக் கொண்டாடுகின்றனர். இரண்டாவது பெருநாள் "ஈதுல் அல்ஹா" எனப்படும் ஹஜ்ஜுப் பெருநாளாகும். இவற்றுள் நோன்புப் பெருநாளைப் பொறுத்த வரையில் இறைவனுக்காக ஒரு மாதம் முழுவதும் பசித்திருந்து நோன்பு நோற்ற பின் வருவதால் இந்தப் பெருநாளுக்கு அதிக மதிப்புண்டு.

அதே வேளை நோன்புப் பெருநாள், இதர பண்டிகைகளைப் போல் கூத்தாட்டங்களையும், கோமாளித்தனங்களையும் கட்டவிழ்த்து வரும் பண்டிகையல்ல. பதிலாக அமைதிக்கும், ஒழுக்கத்திற்கும் உரிய நாளாகும். சகோதரத்துவத்தையும், சமதர்மத்தையும் மலரச் செய்யும் நாளாகும். தொழுகைத் திடலில் எல்லோரும் ஒன்று சேர்ந்து இறைவனுக்கு சிரம் சாய்த்து வணங்கும் நாளாகும்.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரேபியர்கள் இரு பெருநாட்களைக் கொண்டாடினர். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் வந்த போது மதீனாவாசிகள் இதனைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். இறைத்தூதர் அவர்களே இஸ்லாம் வருவதற்கு முன்பே நாங்கள் இவ்விரு நாட்களையும் வருடாந்த விளையாட்டு நாட்களாக தேர்வு செய்திருந்தோம். இதனைக் கேட்ட நபியவர்கள் பண்டிகை கொண்டாடுவதற்காக நீங்கள் தேர்வு செய்து வைத்திருந்த நாட்களை மாற்றி அதைவிடச் சிறந்த இரு நாட்களை அல்லாஹுத் தஆலா உங்களுக்குத் தெரிவு செய்து தந்துள்ளான். ஒன்று ஈகைத் திருநாள். மற்றொன்று தியாகப் பெருநாள் என்று கூறினார்கள். (அபூதாவூத்)



மக்களின் ஒருங்கிணைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காக ஆண்டு தோறும் இவ்விரு பண்டிகை நாட்களையும் இஸ்லாம் தேர்வு செய்துள்ளது. பண்டிகை கொண்டாடுவதற்கு எதை அடிப்படையாக இஸ்லாம் கருதுகின்றதோ அது போற்றத்தக்க பொதுவான காரணமாக இருக்கிறது. மனித வாழ்வின் நோக்கம், நேர்மையான முறையில் சீரிய முறைப்படி படைத்த இறைவனின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப வாழ்வதாகும். இந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்காகவே திருக்குர்ஆனை அல்லாஹுத்தஆலா இறக்கியருளியுள்ளான். இது நபி (ஸல்) அவர்களுக்கு ரமழான் மாதத்திலேயே அருளப்பட்டது என்று அவன் கூறுகின்றான். எனவே, திருக்குர்ஆனை அருளிய இறைவனுக்கு நன்றி செலுத்தும் முகமாக அவனுடைய அருட்கொடையை இந்த மனித சமூகத்துக்கு வழங்கி அவர்களை நேர் வழிப்படுத்தியதை நினைவு கூர்வதற்காக இந்த நாளை இஸ்லாம் பெருநாளாகப் பிரகடனப்படுத்துகிறது. இந்நாளைக் கொண்டாடுவதற்கு முன்னர் திருக்குர்ஆன் இறங்கிய ரமழான் முழுவதும் அல்லாஹுத்தஆலாவுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு நோன்பு நோற்கப்படுகின்றது. நோன்பு நோற்பவர்கள் ஒரு மாத காலமாக இன்ப துன்பங்களை மறந்து இரவும், பகலும் வணக்கங்களில் ஈடுபட்டு நன்றி செலுத்துவர்.

அபூ அஸீம்

இப்படிப்பட்ட புனிதம் மிக்க மாதம் முழுவதிலும் வழிபாடுகளிலீடுபட்டு அதனைக் கண்ணியப்படுத்தி அதைத் தொடர்ந்து வரும் மாதத்தின் தலைநாளை அதாவது ஷவ்வால் மாதம் முதல் நாளைப் பெருநாளாகக் கொண்டாடும் படி இஸ்லாம் கூறுகின்றது. இந்தப் பெருநாளின் போது முஸ்லிம்கள் புத்தாடை புனைந்து, நறுமணம் பூசிப் பள்ளிவாசல்களுக்கும், பெருநாள் தொழுகைக்கென்றே அமைக்கப்படுகின்ற திறந்த வெளிகளிலும், ஒன்று கூடிப் பெருநாள், தொழுகையை நிறைவேற்றுவார்கள். இவ்வாறு மகிழ்ச்சியுடன் தொழுகைக்குச் செல்ல முன் ஒவ்வொருவரும் பித்ரா என்ற தர்மம் செய்வது அவசியமாகும். மேலும் இத்தினம் ஈகையை

(தொடர்ச்சி 16ஆம் பக்கத்தில்)

# ஆரம்பக் கல்வி விருத்தியில் தாயின் பங்களிப்பு

வாழ்க்கையின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும், சிறந்த ஆளுமையுடைய நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும் அடித்தளமிடுவது ஆரம்பக் கல்வியே என்பதை ஒரு போதும் மறுதலிக்க முடியாது. இந்த இலக்கை வெற்றிகரமாக அடைய, ஆரம்பக் கல்விப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் நேர்மையான அர்ப்பணிப்பிற்கு, அம்மாவின் முழுமையான ஒத்துழைப்பும், பங்களிப்பும் வரவேற்கப்படுகின்றது. ஆரம்பக் கல்வியின் உள்ளார்ந்த திறன்களைப் பிள்ளையிடம் உன்னதமாக வெளிக் கொணர்ந்து தமது பிள்ளையினதும், பாடசாலையினதும், கிராமத்தினதும் நலனை மிளிரச் செய்வதும் அம்மாவின் பணியே. இது யதார்த்தமானதும், அர்த்த புஷ்டியுடையதுமாகும். இதனை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதன் மூலமே மக்கள் திருப்திகரமாக, சமாதானமாக வையத்தில் வாழ்ந்திட முடியும்.

## பிள்ளைப் பருவத்தின் முதல் வளர்ச்சி

தாயின் கருப்பையினுள்ளே வளரும் மூலவுருவின் மூளையின் விரைவான ஆரம்ப வளர்ச்சியுடனேயே பிள்ளையின் கற்றல் செயற்பாடு ஆரம்பிக்கிறது. கிட்டத்தட்ட நான்கு வாரங்களில் வளரும் மூலவுருவானது ஒலியைக் கேட்கத் தொடங்கியதும் ஆரம்பத்தில் தனது தாயின் சத்தத்தையே முதலில் கேட்கும். பிறந்த பின்னர் முதல் வருடத்தில் மூளையின் கலங்கள் துரித கதியில் வளர்ச்சியடைகின்றன. அதைத் தொடர்ந்து குழந்தையின் நடத்தைக் கோலங்களுக்கும் கற்றல் செயற்பாடுகளுக்குமான மூளையின் நரம்புக் கலன்களாலாக்கப்பட்ட சுற்றுக்கள் உருவாக்கப்படுகின்றன. இப்பருவமே குழந்தையின் நிலையான உணர்வு சார்ந்த நிலையான கற்றலைத் துரிதப்படுத்துவதற்கான முக்கியமானதும், பொறுப்பானதுமான கால கட்டமாகும். இந்நிலை பிள்ளையின் வாழ்க்கையில் எக்காலத்திலும் மீண்டும் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை.

ஆயினும், முன்பள்ளிப் பருவத்துக்கு முன் குழந்தையைப் பற்றி அன்னையர்களால் கூடுதல் கவனம் எடுக்கப்படுவதில்லை! குழந்தையின் உள்ளம், மனப்பாங்குகள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றைச் சரியான முறையில் விருத்தி செய்வது பற்றி அனேக பெற்றோர்கள் அறியாதுள்ளனர்.

## முன் பள்ளிக் கல்வி

3 தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட பிள்ளையின் முழுமையான கல்வி வளர்ச்சி, வண்ணப் பூப் போட்ட சட்டை அணிவித்தும், புத்தகப் பையுடன் தண்ணீர்ப் போத்தலைக் கையிலேந்த வைத்தும், முன் பள்ளிக்கு அனுப்பி வைப்பதுடன் தமது கடமைகள் நிறைவேறி விட்டதாக அநேகமான தாய்மார் எண்ணுவதுண்டு. இது பொருத்தப்பாடான தோன்றலல்ல. ஒரு பிள்ளையின் கற்றல் செயல்பாட்டிலுள்ள முழுமையான ஆளுமை வளர்ச்சியிலும், அப்பிள்ளையின் முதல் ஐந்து வருடங்களே முக்கியத்துவம் வாய்ந்ததும், சிக்கலானதுமான காலமாகும். இக்காலத்தில் பெறுமதி வாய்ந்த கல்வியில் சில இலக்குகளைப் பிள்ளைகள் அடைந்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* கற்றவற்றைச் செயல்படுத்தும் ஆற்றல் உடையவராக இருத்தல்.
* குறிப்பிட்ட ஒழுங்கமைப்புக்குள் தன்னைக் கொண்டு வருபவராக இருத்தல்.
* சமகாலத் தகவல்களை அறிதலில் ஆற்றல்.
* தெளிந்த சிந்தனை உடையவராக இருத்தல்.
* சிறப்பாகப் பேசும் ஆற்றலுடையவராக இருத்தல்.

படிப்படியாகப் பிள்ளை தனது ஆரம்பக் கல்வியின் இறுதி நிலையில் சில அடிப்படை ஆற்றல்களையும், திறன்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* தொடர்பாடல் சம்பந்தமான ஆற்றல்.
* சமூக ஒழுக்கவியல் துறைகளின் ஆற்றல்.
* ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகவும், பொழுது போக்காகவும் கழிப்பதற்கு ஏற்ப அத்தனைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருத்தல்.
* இயற்கை, சமூக செயற்கைச் சூழல்களைத் தொடர்பு படுத்தும் ஆற்றல்.



* கற்றலில் ஆற்றல்-கற்பதற்குக் கற்றலில் ஆற்றல்.

இச் செயற்பாடுகளில் பிள்ளைக்கும், ஆசிரியருக்கும் பாலமாகவும், ஆற்றல், கற்பித்தலுக்கு உதவுபவராகவும் அன்னையர்கள் திகழ வேண்டும்.

## பொதுவான பண்புகள்

பிள்ளை பாடசாலையில் ஆசிரியருடன் கிட்டத்தட்ட ஆறுமணி நேரத்தையே செலவிடுகின்றது. அப்படியாயின் தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் கற்பித்தல் இலக்கின் முழுமையை நிறைவு செய்வது இலகுவானதல்ல. ஆரம்பக் கல்விப் பாட ஆசிரியர்களிடமே பிள்ளையின் அன்பும், அரவணைப்பும் விஞ்சி நிற்கின்றது. அது போன்ற தன்மையைத் தாயிடம் எதிர்பார்க்கலாமேயன்றித் தந்தையிடம் எதிர்பார்க்க முடியாது. இவ்வயதில் தமது அனைத்துத் தேவைகளையும் அன்னையின் அரவணைப்புடனேயே நிறைவு செய்யப் பிள்ளைகள் விரும்புவார்கள். எனவே அன்புடனும், அரவணைப்புடனும் எதிர்கால வாழ்வியலுக்குச் சமிக்ஞையாகக் குடும்பத்தில் அன்னையரே இருத்தல் வேண்டும்.

பிள்ளையின் நல் மனப்பாங்கு வளர்ச்சியில் முக்கியப் பங்கினை வகிப்பவையாகப் பாடத்திட்டத்துக்கு மேலாக இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றுள் சித்திரம், நடனம், உடற்கல்வி, சங்கீதம், ஆக்கம், நடிப்பு ஆகியவை உள்ளடங்கும். இதில் ஆரம்பப் பிரிவினரிடையே கூடுதல் ஆர்வமும் விருப்பமும் உண்டு. இச் செயற்பாட்டை ஆசிரியரால் மட்டும் நிறைவு செய்ய முடியாது. எனவே பல தரப்பினரின் ஒத்துழைப்பை ஆசிரியர் நாட வேண்டியுள்ளது. எனவே, ஆசிரியர்களுக்கு உசாத்துணையாகவும், அதற்கும் மேலாகப் பிள்ளைகளின் வழிப்படுத்துனராகவும், ஒழுங்கமைப்பாளராகவும் அன்னையர் இருத்தல் வேண்டும்.

இரு கைகளைத் தட்டும் போது எவ்வாறு சத்தம் வருகிறதோ அதே போன்றே பிள்ளை ஆசிரியருடனும், அன்னையருடனும் இணையும் போதே ஆரம்பக் கல்வி முழுமையான நிறைவைத் தரும் எனலாம்.

***மு. விக்னேஸ்வரன்,** BA, Dip in Ed, SLPS 2*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவும் அதன் நாடுகளும்



**குறிப்பிடப்படும் நாட்டின் பெயர் : மொனாக்கோ**
**கண்டம் : ஐரோப்பா**
**பிரதேசம் : தென் கிழக்கு ஐரோப்பா**
**எல்லைகள் : தெற்கே மத்திய தரைக்கடலையும், கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கே பிரான்ஸையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.**

## தரைத்தோற்றம்

உலகின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்று மொனாக்கோவாகும். இதன் மொத்த நிலப்பரப்பின் அளவு 195 கிலோ மீற்றராகும். அல்ப்ஸ் மலை மற்றும் மத்திய தரைக்கடல் எல்லையிலுள்ள பிரதேசத்தில் இந்நாடு அமைந்துள்ளது. இதன் காரணமாக உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் நாடாக உள்ளது. நான்கு மாவட்டங்களைக் கொண்டது. இதன் தலைநகரம் மொனாக்கோவாகும். லா கொடேமின், மொன்டி காலோ மற்றும் புரொன்ட்விலி என்பவை மற்றைய மாவட்டங்களாகும்.
பெரிய மரங்களற்ற ஒரே நாடு மொனாக்கோவாகும். இங்கு மிகச் சிறிய தாவர வகைகளையே காணலாம். நிலமானது கபூக் கற்களால் உருவான பிரதேசமாகக் காணப்படுகின்றது.

## காலநிலை

இங்கு சமுத்திரக் காலநிலை காணப்படுகின்றது. அநேகமாக கடற்கரைப் பகுதிகளில் சூடான காலநிலை காணப்படுகின்றது. வருடத்தில் 300 நாட்களுக்குச் சூரிய ஒளி நன்றாகக் கிடைக்கின்றது. கோடைக்காலம் அதிக வெப்பத்தைக் கொண்டது. குளிர்காலம் அதிக குளிராக இருக்காது.

## சனத்தொகை

சனத்தொகை அடர்த்தி கொண்ட நாடுகளுள் மொனாக்கோவும் ஒன்றாகும். சிறிய நாடானாலும் பெருந் தொகை மக்கள் குடியிருப்பதன் காரணமாகச் சனத்தொகை அடர்த்தி அதிகமாக உள்ளது. இங்கு வாழும் பெரும்பான்மையினர் பிரான்சியர்கள் ஆவர். மொனாக்கிய இனத்தவர்கள் உள்நாட்டு வாசிகளாக உள்ளனர். இவர்கள் பிரான்சிய மற்றும் இத்தாலி இனத்தவர்களின் கலப்பினத்தவர்களாக உள்ளனர்.
* சனத்தொகை : 32,130 (2003 இன் மதிப்பீடு)
* வயதடிப்படையில் : 0 இற்கும் 14 இற்கும் இடையில் : 15.5%
15 இற்கும் 64 இற்கும் இடையில் : 62.1%
64 வயதிற்கு மேல் : 22.4%








* சனத்தொகை வளர்ச்சி வீதம் : 0.44
* ஆண், பெண் விகிதம் : ஆண் 0.95, பெண் 1
* எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் : 79.27 வருடங்கள்
* இங்குள்ள மக்களைக் குறிக்கும் பெயர் : மொனெகஸ்கியூ அல்லது மொனாக்கோ
* இனங்கள் : பிரான்சியர் 47%, மொனாக்கோ 16%, இத்தாலி 16%, பிற இனத்தவர்கள் 21%

## மொழி மற்றும் மதம்

நாட்டின் பிரதான மொழியாகப் பிரஞ்ச் மொழி உள்ளது. இதுவே அரச கரும மொழியாகும். இம் மொழியை விட ஆங்கிலம், இத்தாலி மற்றும் மொனெகஸ்கியூ (இது இத்தாலி மற்றும் பிரான்சிய மொழியின் கலப்பாகும்) போன்ற மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. வர்த்தக நடவடிக்கைகளின் போது பிரஞ்ச் மொழி மற்றும் ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்றது.
பிரதான மதமாக றோமன் கத்தோலிக்க மதம் உள்ளது. மொத்தச் சனத்தொகையில் 90% வீதத்தினர் கத்தோலிக்கர்கள் ஆவர்.

## கலாசாரம்

நகைகளைக் கொண்டு அலங்கரித்துக் குதூகலிப்பது இந்நாட்டவரது கலாசாரத்தின் பிரதான அங்கமாக உள்ளது.

# மொனாக்கோ

## பொருளாதாரம்

உல்லாசப் பிரயாணத் தொழிலிலேயே மொனாக்கோவின் பொருளாதாரம் பெரிதும் தங்கியுள்ளது. இதனை விட முத்திரைகளை வெளியிடல், புகையிலை, வங்கித் தொழில் மற்றும் காப்புறுதிச் செயற்பாடுகள் மூலம் பொருளாதாரம் வலுப் பெற்றுள்ளது. நாட்டிலுள்ள மக்களில் அநேகர் செல்வந்தர்களாக உள்ளனர்.
* தேறிய உள்நாட்டு உற்பத்தி : 870 மில்லியன் டொலர் (1999 இல்)
* தனிநபர் ஒருவரின் கொள்வனவுச் சக்தி : 27,000 டொலர்
* தொழிற் படையின் எண்ணிக்கை : 30,540
* வேலையற்றோர் வீதம் : 3.1%
* கைத்தொழில்கள் : உல்லாசப் பிரயாணத் தொழில், கட்டிட நிர்மாணம், சிறு கைத் தெழில்கள்.
* ஏற்றுமதி : பிரான்சிய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்கின்றது.
* இறக்குமதி : பொருட்கள் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடமிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.
* நாணயம் : யூரோ

## தொலைத் தொடர்பு மற்றும் போக்குவரத்து

நாட்டிலுள்ள அனைவரும் தொலைபேசி வசதிகளைக் கொண்டுள்ளனர். எவ்.எம் வானொலிச் சேவை இங்கு தடை செய்யப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள புகையிரதப் பாதையின் நீளம் 17 கிலோ மீற்றராகவும் பெருந்தெருக்களின் நீளம் 50 கிலோமீற்றராகவும் உள்ளது. இங்கு விமான நிலையங்கள் இல்லை. மொனாக்கோவிற்கு வருபவர்கள் பிரான்சின் நீஸ் விமான நிலையத்திற்கு வந்தே இந்நாட்டிற்கு வரவேண்டியுள்ளது. நீஸ் விமான நிலையத்திலிருந்து ஹெலிகொப்டர் மூலம் மொனாக்கோவிற்கு வருவதற்குப் போக்குவரத்து வசதிகளை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

## நிர்வாகம்

1962 ஆம் ஆண்டு அரசியலமைப்புப்படி இன்று வரை இளவரசர் ஒருவரின் நிர்வாகத்தின் கீழே காணப்படுகின்றது. அரசியல் அதிகாரம் இளவரசர் உட்படத் தேசிய சபையின் அங்கத்தவர்கள் 18 பேர்களுக்கிடையில் பகிரப்பட்டுள்ளது. இவர்கள் 5 வருட நிர்வாக காலத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர். நிர்வாக அதிகாரம் இளவரசர் மற்றும் அரசின் பிரதான அதிகாரியுட்பட அங்கத்தவர்களிடம் உள்ளது. அநேகமாக அரசின் பிரதான நிறைவேற்று அதிகாரி பிரான்சிய இனத்தவராகவே இருக்கின்றார்.

## வரலாறு

ஆரம்ப காலத்தில் பிரான்சின் ஒரு பகுதியாகவே மொனாக்கோ இருந்தது. 1297 ஆம் ஆண்டளவில் ஜனொஸ் என்றழைக்கப்படும் பிரபுக்களின் குடும்பம் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தது. பின்பு 1793 இல் பிரான்சியப் புரட்சி நடைபெற்ற காலப்பகுதியில் கிரிமால் என்ற பெயரால் அழைக்கப்பட்ட இப்பிரதேசம் பிரான்சிலிருந்து பிரிந்து சென்றது. 1815 ஆம் ஆண்டு நடைபெற்ற வியன்னா உடன் படிக்கையின் பின் மொனாக்கோ, சார்டினியா அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. பின் 1861 ஆம் ஆண்டு திரும்பவும் சுதந்திர நாடாக மாறியது. ஆனால் பிரான்சின் மேற்பார்வையின் கீழ் இந்நாடு செயற்பட்டு வந்தது. 1993 இல் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கத்துவ நாடாகச் சேர்ந்து கொண்டது.

எஸ். கிறேஸ்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிணற்றில் விழுந்த நரி!

கிணற்றில் விழுந்து விட்ட நரியொன்று, வெளியே வர வழியின்றித் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தது. அப்போது அந்தக் கிணற்றடிக்கு ஆடு ஒன்று வந்தது. அதற்கு வெகுவாக தண்ணீர்த் தாகம் எடுத்ததால் கிணற்றில் நீரைப் பருக முடியுமா? என்ற ஆவலில் கிணற்றை எட்டிப் பார்த்தது.

கிணற்றின் உள்ளே நரியைக் கண்ட ஆடு, "நரியாரே பருகும் அளவிற்கு கிணற்றில் நீர் உள்ளதா?" என வினவியது. தந்திரம் மிக்க நரி... "ஆடே.... நீயும் இங்கு வந்து பார்த்தாயானால் கண்டுகொள்ள முடியும். குடிப்பதற்கு ஏற்ற சுத்தமான நீர் இங்கு உள்ளது. தேவையான அளவிற்கு குடிக்கக் கூடிய வகையில் நீர் உள்ளது. நான் மட்டும் குடித்து இந்த நீரை முடித்து விட முடியாது" என்றது.

இதனைக் கேட்ட ஆடு.... மறு பேச்சின்றி, ஆவல் மேலிட "ஜடாஸ்" என கிணற்றில் குதித்தது.



சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்ட நரி ஆட்டின் கொம்புகளின் மீது ஏறி ஒருவாறு கிணற்றிலிருந்து மேலே ஏறி வந்து விட்டது.

கிணற்றிலிருந்து வெளியே வந்த நரி, கிணற்றிற்குள் கிடந்த ஆட்டைப் பார்த்து, "உனக்கு கொஞ்சமேனும் மூளை இருந்திருந்தால், சிந்தித்திருப்பாய். ஆனால், அவசரப்பட்டு முட்டாள் தனமான காரியத்தை செய்து விட்டாய். நான் சென்று வருகிறேன்" எனச் சென்று விட்டது. ஆடோ தன்னைத்தானே நொந்து கொண்டது.

# அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டிசம்பர் மாதத்திலேயே அறிவிக்கப்படுவார்!



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்து விட்டது. இப்போது தேர்தல் பெறுபேறுகளைப் பற்றிய அலசல்களே நடைபெற்று வருகின்றன. பிரதான போட்டியாளர்களான ஜோர்ஜ் டபிள்யூ புஷ், ஜோன் கெரி ஆகிய இருவருக்கிடையே நடைபெற்ற கடும் போட்டியில் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷே அதிக அளவில் வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

அமெரிக்கத் தேர்தல் முறை அமைப்பின் படி அங்கு தேர்தலின் முன் தெரிவாகும் செனட் சபையின் 2/3 பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுள்ள ஒருவரே ஜனாதிபதியாக முடியும். இதன்படி, பார்க்கப் போனால், டிசம்பர் மாதம் முதலாவது திங்கட் கிழமைக்கு அடுத்ததாக வரும் இரண்டாவது புதன் கிழமையன்று, அமெரிக்காவின் ஜனாதிபதி யார்? என்பது உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். இதனையடுத்து இம்முடிவு, செனற் சபையின் செயலாளருக்கு, ஜனவரி 6 ஆம் திகதியன்று வழங்கப்பட்டு, ஜனவரி 20 ஆம் திகதியன்று புதிய ஜனாதிபதி, பதவிப் பிரமாணம் மேற்கொள்வார்.




இம்முறை தேர்தலில் 11 கோடியே 20 லட்சத்திற்கும் மேற்பட்ட அமெரிக்க மக்கள் வாக்களித்துள்ளனர். அமெரிக்காவைப் பொறுத்த வரையில் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுபவருக்கு 400,000 அமெரிக்க டொலர்கள் மாதாந்தச் சம்பளமாக வழங்கப்படும். இதர செலவுகளுக்காக 50,000 டொலர்கள் வழங்கப்படும். இதே வேளை ஓய்வு பெறும் ஜனாதிபதிக்கு மாதாந்த ஓய்வூதியப் பணமாக 1,61,200 கிடைக்கப் பெறும்.

ஜனாதிபதியாகத் தெரிவாகும் ஒருவரைக் குறித்த பதவிக் காலத்திற்குள் ஜனாதிபதிப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமாயின், அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்தே, அதனை நிறைவேற்ற முடியும். அல்லது குறித்த நபர் இராஜினாமாச் செய்யவோ, மரணமடையவோ வேண்டும்.

மேற்படி காரணங்களில் ஏதேனும் ஒரு காரணத்தின் நிமித்தம் ஜனாதிபதி பதவி விலகினாலோ, விலக்கப்பட்டாலோ, அவருக்குப் பதிலாக உப ஜனாதிபதியே பதவி வகிப்பார். இது வரை அமெரிக்க வரலாற்றில் ஒரே ஒரு ஜனாதிபதியே இராஜினாமாச் செய்துள்ளார். 1974 ஆம் ஆண்டில் ரிச்சர்ட் நிக்ஸன் என்பவரே இவ்வாறு இராஜினாமாச் செய்தவராவார். இதே வேளை ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் போது 8 பேர் மரணமடைந்துள்ளனர். இக்காலகட்டங்களின் போது உப ஜனாதிபதிமாரே ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தனர்.

இதுவரை காலமும் அமெரிக்காவில் 40 பேர் ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர். இதில் 15 பேர் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்களாவர். இம்முறை ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷிற்கும், ஜோன் கெரிக்கும் இடையே நடைபெற்ற தேர்தலின் போது இருவருமே சம பலத்தில் இருப்பதாகவே தேர்தல் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. எனினும்... ஓஹியோ மாநிலத்தின் தேர்தல் பெறுபேறுகள், எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றி வாக்குகளின் அடிப்படையில் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றன.

ஜோன் கெரியும் நாகரிகமாகத் தனது தோல்வியை




ஏற்றுக் கொண்டு ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை வாழ்த்தியுள்ளார். ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்டுள்ள யுத்தத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்கி வருகின்ற பிரிட்டன், ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் வெற்றியையிட்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டுள்ளது. ஏராளமான பிரிட்டன் பத்திரிகைகளும் புஷ்ஷைப் பாராட்டி வாழ்த்தியுள்ளன.

உலக அளவில் ஆளும் கரங்கள் நீண்டு, உலக ஆதிக்கச் சக்தியாக அமெரிக்கா நின்று நிலைக்க வேண்டும் என்ற ஆவல் அமெரிக்க மக்களிடம் இருப்பதன் வெளிப்பாட்டையே இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுவதாக விமசகர்கள் கூறுகின்றனர்.


வி. ரெட்லி ஹொரிசன்

# சுரங்கப் பாதை தோண்டும் கருவி!

சுரங்கப் பாதை என்பது நிலத்திற்குக் கீழே பயணம் செய்யக் கூடியவாறு அமைக்கப்படும் பாதையாகும். இயற்கையாகவே உருவாகும் சுரங்கப் பாதைகள், செயற்கையாக உருவாக்கப்படும் சுரங்கப் பாதைகள் என இரு வகையிலான சுரங்கப் பாதைகள் உள்ளன. குறிப்பாகப் பொருட்களைக் கொண்டு செல்லவும், இவ்வகைச் சுரங்கப் பாதைகள் பயன்படுகின்றன.

இதில் செயற்கையாக உருவாக்கப்படும் சுரங்கப் பாதைகள் எவ்வாறு அமைக்கப்படுகின்றன என்பதைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

செயற்கையான சுரங்கப் பாதைகளை அமைப்பதற்கு நவீன ரக இயந்திரங்களே பேருதவியாக உள்ளன. இவ்வாறு சுரங்கப் பாதைகளை அமைக்கப் பயன்படும் நவீன கருவிகளின் உள் அமைப்பினை அருகேயுள்ள படத்தில் பார்ப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண மல

## பல



**மலரில் காதல் கொள்ளாத எவரும் இருக்க முடியாது. ஆனால் மலர்கள் பற்றிய தகவல்களை அறிய அதனுள் மூழ்கி எழ வேண்டும்.**



பூவின் பாகங்கள்





மலர்களை நேசிக்காத, விரும்பாத எவரும் உலகில் இல்லை. மலர்கள் அனைவரையும் கவரக் கூடியன. ஆனாலும் எல்லா மலர்களும் மணம் கமழ்வதில்லை. சில வகையான மலர்கள் கவர்ச்சியான நிறங்களைக் கொண்டுள்ளன. சில வகை மலர்கள் கவர்ச்சி இல்லாவிட்டாலும் நறுமணம் கமழ்பவையாகும். "தூர இருந்தால் தாழம்பூவும், அருகில் நின்றால் மல்லிகையும் வாசம் வீசும்" என்பது கிராமியக் கவிதைகளில் வரும் அடிகளாகும்.

புகழ் பெற்ற கவிதைத் தொகுதியொன்றில் கண் பார்வை இல்லாத குழந்தையொன்று மலர்களைப் பற்றி இவ்வாறு கற்பனை பண்ணுகின்றது என்று கவிதையொன்றுள்ளது.

**மலர்கள் அழகானவை**
**நல்ல நல்ல வர்ணங்களில்**
**என்றார்கள்**
**தெரிகின்றன. பார்க்க**
**முடியும். அம்மா அது**
**என்ன என்று கேட்க**
**நான் வந்தேன்**
**எனக்குத் தெரியாது**
**தெரிந்து தாருங்கள்.....**
**அவை எம் மனதுக்குள்**
**எவ்வளவு சிரிப்பை**
**உண்டு பண்ணுகின்றன.**

என்று கவிஞர் ஒருவர் தன் கவிதையில் வடித்துள்ளார். தாவரம் ஒன்றின் வாழ்க்கை வலையமைப்பின் முதல் சந்தி என்று மலர்களைக் குறிப்பிடலாம்.

உலகில் உள்ள எல்லா மரங்களிலும் மலர்கள் பூப்பதில்லை. மலர்களைப் பூத்துக் குலுங்கச் செய்யும் ஒரு சில மரங்களே உள்ளன. உலகில் அவ்வாறான பூக்கும் மரங்கள் (தாவரங்கள்) 230,000 உள்ளன.

"டெய்சி" என்ற நிலத்துடன் வளரும் தாவரம் முதல் நன்கு அடர்த்தியாக வளரக் கூடிய 'யுகலிப்டஸ்" என்ற இனம் வரையில் பல்வேறு இனங்களில் இந்த பூக்கும் மரங்கள் உள்ளன.

## மலர்கள் ஏன் மலர்கின்றன

தாவரப் பரம்பல் நடைபெறுவதற்கு இரு முக்கிய வழிகள் உள்ளன.

1. பால் ரீதியான உறவு
2. பால் ரீதியற்ற உறவு

பூக்கும் தாவரங்களில் விசேட மாக உருவான பகுதி தான் மலர்ப் பகுதி. இந்த மலர்ப் பகுதி பல்வேறு பிரிவுக ளைக் கொண்டதாகும்.



உலகிலே மிகவும் உயரமான மலர்



உலகிலே மிகப் பழைய பூவின் கண்டுபிடிக்கப்பட்ட களம்.

பூக்கள் வெவ்வேறு விதமான உருவவமைப்புகளைக் கொண்டதாகும். இந்த வடிவமைப்புத் தான், விசேடமாக வடிவமைவு, நிறம், மணம் என்பன தான், அவை பால் பூச்சிகளையும் ஏனைய நுண்ணுயிர்களையும் கவரச் செய்யும் தந்திரோபாயமாகும். பூவின் நுனியில் முனையொன்று காணப்படுகின்றது. முனையின் நுனியில் அகலமான சிறிய மடல் போன்ற பகுதி இருக்கும். அதில் உட்சரிவான குழி போன்ற அமைப்பு இருக்கும். சில பூக்களில் மகரந்த மணிக்குச் சமமாக அல்லது மேலதிகமாகவேனும் மணிகள் உண்டு. இந்த மணிக்கு உள் பக்கமாக மகரந்தம் உண்டு. அதுவும் பல்வேறு நிறங்களில் உள்ளன.

அதனைச் சூழப் பூவிதழ்கள் உள்ளன. (Petals) இவற்றைச் சுற்றிப் பற்கள் என்றும், காப்பு என்றும் அழைக்கப்படும் பகுதி உள்ளது. மலர்களில் வித்து உருவாக வேண்டுமாயின் ஆண், பெண் தொடர்பு ஏற்பட வேண்டும்.

சில மலர்களில் ஆண், பெண் இருபால்களும் ஒன்றாக உண்டு. சிலவற்றில் பெண் அமைப்பும், இன்னும் சிலவற்றில் ஆண் அமைப்புமாக வெவ்வேறாக இருக்கும்.

## மகரந்தம்

மலர்களில் இனப்பெருக்கம் மகரந்தச் சேர்க்கை என்றழைக்கப்படும். (Pollination) இங்கு ஒரே மலரில் இரு நிகழ்வு நடைபெறுவதாயின் அந்தத் தாவரத்தின் நீண்ட கால வாழ்வுக்கு நல்லதல்ல. இதன் மூலம் தாய்த் தாவரத்திற்கு நோய் உருவாகி எதிர்காலத்தில் அதன் இனமே அழிவுறும் நிலை உருவாகலாம்.

அதனால் இவ்வாறான தாவரங்களில் இயற்கையான கருக்கட்டல் (மகரந்தச் சேர்க்கை) மூலமான இனப்பெருக்க முயற்சியே மேற்கொள்ளப்படுகின்றது. அது இருவேறு மலர்களுக்கிடையில் நடைபெறுவதாகும்.



உலகில் மிகப் பெரிய "ரப்லேசியா" மலர்

இத்தகைய முறையில் நிகழும் ஒரு வழிமுறை தான் பூச்சிகள், வண்டுகள் மற்றும் நுண்ணுயிர்கள் மூலம் நிகழும் மகரந்தச் சேர்க்கையாகும்.

அதற்காக வண்டுகள், வண்ணாத்தி மற்றும் நுண்ணுயிர்களைக் கவரும் தன்மை காணப்படுகின்றது. அதற்காகத்தான் மலர்கள் கண்களைக் கவரும், கவர்ச்சியான நிறங்களுடனும் வடிவங்களிலும் காட்சி தருகின்றன. நறுமணம் கமழும் வகையிலும் அத்தோடு அவற்றில் தேன் சுரக்கும் விதத்திலும் அமைந்துள்ளன. இந்தத் தேன் சுவை காரணமாக, அதனால் ஈர்க்கப்பட்டு அடிமையான பூச்சி, வண்டு தேனீக்கள் மலர் விட்டு மலர் தாவும்.

அவ்வாறு தேன் குடிக்கச் செல்லும் வண்டுகள், பூச்சிகள் மற்றும் நுண்ணுயிர்கள் அவற்றின் கால்களிலும், முகத்திலும் மகரந்தத்தைப் பூசிக் கொண்டும், ஒரு மலரில் இருந்து இன்னொரு மலருக்குத் தாவிச் செல்லும். அப்போது அந்த மகரந்தம் மற்ற மலரில் உராய்வதன் மூலம் அல்லது தடவப்படுவதன் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகின்றது.

பூச்சிகள் மூலம் மகரந்தச் சேர்க்கை நடத்தும் மலர்கள் எப்போதும் கவர்ச்சியானதாகப் பளிச்சிடும்



உலகில் மிகச் சிறிய பூங்கொத்து.





பொப்பி மலர் அதன் கீறுகள் முதிரும் வரை அடைபட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ர்களுக்குள் மலரும் ...ல கதைகள்





சிவப்பு, ஊதா, மஞ்சள் போன்ற வர்ணங்களில் காணப்படும். இரவில் மலரும், மொட்டவிழும் மலர் எப்போதும் வெள்ளை நிறமானதாக இருக்கும்.

மகரந்தச் சேர்க்கைக்குரிய மலர்கள் பூச்சிகளுக்குத் தேவையானபடி அமைவு கொண்டிருக்கும். சில மலர்கள் அவ்வாறில்லாமல் வித்தியாசமானதாகக் காணப்படும். பூச்சிகளை உண்டு உயிர்வாழும் தாவரங்களும் உள்ளன. அவற்றின் மலர்கள் வாளி போல் உள்நோக்கிச் சரிவானதாகக் குவிவாகக் காணப்படும். அந்தக் குழிக்குள் தேன் காணப்படும். அப்போது வண்டுகள், நுண்ணுயிர்கள் குழிக்குள் விழுந்ததும் இதழ்களை மூடிக் கொள்ளும். அப்போது அதனுள் காணப்படும் பற்களைப் போன்ற அமைப்பால் நசுக்கி உறிஞ்சப்படும். அதன் மூலம் ஊன் உண்ணும் தாவரம் தனக்குத் தேவையான போசாக்கை நைட்ரஜனை (Nitregen) உறிஞ்சி எடுக்கும்.





பூச்சிகளைக் கவரும் மஞ்சள் வர்ணப் பூ





## பழைமை வாய்ந்த மலர்

உலகின் மிகவும் பழைமை வாய்ந்த மலராகக் கருதப்படுவது 14 கோடி வருடங்களுக்கு (140 Million Years) முன்னர் உலகில் காணப்பட்டதாகக் கருதப்படும் மலராகும்.



உலகில் இரண்டாவது பெரிய மலரான அமோபோப்பளஸ்.



அமெரிக்க மற்றும் சீனத் தாவர வியல் விஞ்ஞானிகள் குழுவொன்று சீனாவின் பீஜிங் நகரத்தில் இருந்து 250 மைல் தொலைவில் அமைந்துள்ள ஓர் இடத்தில் இருந்து இம்மலர் இருந்ததற்கான ஆதாரமாக அதன் தளங்களைக் கண்டுபிடித்துள்ளனர். 2002 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இந்தக் கண்டுபிடிப்பைச் செய்துள்ளனர். இருந்தபோதும் இந்த மலர் எந்தத் தாவர இனத்துக்குரியது என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

ஓரளவு சிறிய பறவைகளைக் கொண்டு மகரந்தச் சேர்க்கை நடைபெறும் மலர்களும் உள்ளன. அந்த வகை மலர்கள் சற்றுப் பெரிதாகக் காணப்படும். பறவைகள் இறக்கைகளை விரித்து அமர்வதற்கு ஏதுவாக அந்தப் பூக்கள் அமைந்துள்ளன.

## உலகில் மிகப் பெரிய பூ

உலகிலே மிகப் பெரிய மலராக "டய்டான் ஆரமி" என்ற மலர் கருதப்படுகின்றது. இவ்வகை மலர்கள் சுமத்ராத் தீவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. உலகில் உள்ள மலர்களில் அதிகூடிய நறுமணம் கொண்ட மலரும் இம்மலரே ஆகும்.

இது 03 மீற்றர் அளவு உயரம் கொண்டவையாகும். 1818 ஆம் ஆண்டளவில் தோமஸ் ரல்ப் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட ரப்லேசியா (Rafflesia) என்ற மலர் உலகில் இரண்டாவது மிகப் பெரிய பூவாகும்.


## மிகச் சிறிய மலர்

உலகில் மிகவும் சிறிய மலராக வொல்பியா (Wolfia) என்பது கருதப்படுகின்றது. இவ்வகைப் பூக்கள் குழை வடிவில் இலகுவாக வீழ்ந்து (உதிர்ந்து) விடக் கூடியதாக உள்ளன. இவற்றுள் இருவகை இனங்கள் உள்ளன.

1. Wolfias globosa இவை ஆசியப் பிராந்தியத்தில் காணப்படும்.
2. Wolfias angusts என்பது இரண்டாவது சிறிய இனமாகும். இவை அவுஸ்திரேலியாவில் காணப்படக் கூடியதாகும். இதன் அளவு 0.6மில்லி மீற்றர் ஆகும். அகலம் 0.3 மி.மீ ஆகும். பாரம் மைக்ரோ கிராம் 150 ஆகும்.

## நீளமான பூ

மிக நீளமான பூவாகக் கருதப்படுவது மெக்சிகோவில் காணப்படும் மெகுவே (Meguay) என்ற மரத்தில் பூக்கும் பூவாகும். இதன் நீளம் 20 அடியாகும். அந்த மரத்தில் இவ்வாறு பூவொன்று பூப்பதற்கு 12 வருடங்கள் செல்கின்றன. அந்த பூ பூத்த பின்னர் அதனோடு மரமும் இறந்துவிடும்.







உலகில் மிகப் பழைய மற்றொரு மலர்

## அதிகளவு பூக்கும் மலர்

அதிகளவு பூக்களை ஒரே முறையில் பூக்கும் தாவரமாக வைனீஸ் விஸ்டேரியா என்ற தாவரத்தில் பூக்கும் மலர்கள் கருதப்படுகின்றன. இவை கலிபோர்னியாவில் சய்ராமெடிரி என்ற பகுதியில் காணப்படும். ஒரே முறையில் 15 இலட்சம் அளவு மலர்கள் மலரும்.

பொலிவியாவில் காணப்படும் "புயாரய்" என்ற மலர்களும் உலகிலே மிகவும் அரிதாகக் காணப்படும் மலர்களாகும். இம்மலர்களும் ஒரு கொத்தில் 8000 பூக்கள் அளவில் கொண்டதாகக் காணப்படும்.

## கின்னஸில் பதிவான பூ

உலகில் மிகவும் விசாலமான ரோஜாப் பூக்கொத்தாக "அஸ்ரிடா பேர்மன்" என்பவர் வளர்த்த ரோஜாப் பூ பதிவாகியிருக்கின்றது. அந்தப் பூங்கொத்து (குழை) 70,000 ரோஜாப் பூக்களைக் கொண்டிருந்ததாகவும் அதன் நீளம் 23.4 மீற்றர் என்றும் பதிவாகியிருக்கின்றது.

இவ்வாறாக மலர்கள் இதமானவை மட்டுமல்லாமல் இனிமையான பல தகவல்களையும் கொண்டு காணப்படுகின்றன.

ஹுனா-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுச் சிறப்புக்கள்

1. இங்கிலாந்து - கனவுக் கோபுர நகரம்
2. அவுஸ்திரேலியா - கங்காரு நாடு
3. பெல்ஜியம் - ஐரோப்பாவின் போர்க்களம்
4. கொரியா - அதிகாலை அமைதி நாடு
5. எகிப்து - நைல் ஆற்றின் நன்கொடை
6. பர்மா - பொற்கோபுர நாடு
7. பெங்களூர் - இந்தியாவின் பூந்தோட்டம்
8. அமெரிக்கா - பொற் கதவு நகரம், புயலடிக்கும் நகரம்
9. ஆபிரிக்கா - இருண்ட கண்டம்
10. ரோமாபுரி - அழியா நகரம்
11. கல்கத்தா - அரண்மனை நகரம்
12. மதுரை - கோவில் நகரம்
13. பமீர் - உலகத்தின் கூரை
14. கினி கடற்கரை - வெள்ளையனின் கடற்கரை
15. கியூபா - சர்க்கரைக் கிண்ணம்
16. கொச்சின்-இந்தியா - அரபிக் கடலின் அரசி
17. துருக்கி - ஐரோப்பாவின் நோயாளி
18. ஜெய்ப்பூர் - இளஞ்சிவப்பு நகரம்
19. பின்லாந்து - ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு
20. நோர்வே - நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு
21. மும்பை (பம்பாய்) - இந்தியாவின் நுழைவாயில்

**யோஷிகா சாந்திராஜ், தரம் 10,**
**யாழ்/இந்து மகளிர் கல்லூரி.**

## சுற்றுப்புறச் சூழலைக் காப்போம்!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோயற்ற வாழ்விற்குச் சுற்றாடலை மாசடையாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஆனால் இன்று சுற்றாடல் மாசுபடுதல் காரணமாகப் பெருந்தொகையானவர்கள் குறிப்பாகச் சிறுவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாக்கப்பட்டு



உயிரிழக்கும் நிலைக்கும் ஆளாகின்றனர். மக்கள் தொகையும், வசிப்பிடங்களும் அதிகரிப்பதன் காரணமாகவே சுற்றாடல் மாசடைகின்றது. அத்தோடு காடுகள் அழிக்கப்பட்டு இயந்திரங்கள் நிறைந்த தொழிற்சாலைகள் நிறுவப்படுவதினாலும் சுற்றாடல் பாதிக்கப்படுகின்றது. காடுகள் அழிக்கப்படுவதினால் மரங்கள் வெளியிடுகின்ற ஒட்சிசனும் மக்களுக்குக் கிடைப்பதில்லை. அதற்கு நேர்மாற்றமாகத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் காபனீரொட்சைட்டை மக்கள் சுவாசிக்க வேண்டிய நிலையே இன்று ஏற்பட்டுள்ளது.

மேலும், தொழிற்சாலைகள் கழிவுகள், இரசாயன உரப் பசளைகள், பூச்சி கொல்லிகள், கிருமி நாசினிகள், சாக்கடைகள் போன்றவை நிலத்தில் படிவதாலும் நிலம் மாசடைந்து எமது சுற்றாடலை மாசடையச் செய்கின்றது.

இதேவேளை தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் ஆறுகளிலும், குளங்களிலும், வாவிகளிலும் கலப்பதால் நீர் மாசடைகின்றது. அது நீர் வாழ் உயிரினங்கள் அழியவும் அந்நீரைப் பருகும் மனிதர்களும், விலங்குகளும் நோய்வாய்ப்படவும் காரணமாக அமைகின்றது.

ஆகையால் எமது வீட்டையும், வீட்டுச் சூழலையும் நாம் பாதுகாப்பது எமது கைகளிலேயே தங்கியுள்ளது. எமது வீட்டுப் புறச் சுற்றாடல் மாசடையாமல் பாதுகாத்து நுளம்பு, ஈ முதலிய தொல்லைகளிலிருந்தும் எமது வீட்டுச் சுற்றாடலைச் சுத்தப்படுத்தி வைப்போமேயானால் பயங்கரத் தொற்று நோய்களில் இருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**ஏ.எஸ்.அர்ஸாத், தரம் 8", அல்ஹிக்ரா மு.ம.வி,**
**கொட்டாரமுல்லை.**

## சகாராப் பாலைவனம்

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள சகாராப் பாலைவனம் என்பது அறிந்த விடயமே! இந்தப் பாலைவனம் ஒன்பது சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. சகாராவுக்கு அடுத்தடுத்த இடங்களில் உள்ள ஒன்பது பெரிய பாலைவனங்களை ஒன்று சேர்த்தால், எவ்வளவு பரப்பளவு வருமோ அவற்றின் மொத்தப் பரப்பளவையும் இந்தச் சகாராப் பாலைவனம் கொண்டுள்ளது.

இந்தப் பாலைவனத்தின் பெரும்பாலான பகுதிகளில், வறண்ட பாறைகளும், சரளைக் கற்களும் நிறைந்துள்ளன. மீதமுள்ள இடங்களில் மணல் நிறைந்துள்ளது. சில இடங்களில் இந்த மணல் 180 மீற்றர் உயரத்திற்குக் குவிந்து குன்று போல் காட்சி அளிக்கிறது.

ஆபிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, டுனீசியா, லிபியா, சூடான், நைஜீரியா, சாட், மாலி, மௌரிஷியானியா ஆகியவை எல்லாம் சகாராப் பாலைவனத்தைச் சூழ்ந்திருக்கும் நாடுகளாகும். எகிப்து நாட்டின் 75% சதவீதப் பகுதி இந்தப் பாலைவனத்தில் தான் உள்ளது.

**பாத்திமா முஸ்னா, தரம் 8",**
**அல்.அஸ்ஹர் ம.கல்லூரி, திஹாரிய.**




நான் ஜப்பானில் ஒரு பேனாத் தொழிற்சாலையில் பிறந்தேன். என்னையும் இன்னும் என்னைப் போல் பல நண்பர்களையும் ஒரு பெட்டியில் அடைத்தார்கள். நாம் கப்பலொன்றில் ஏற்றப்பட்டோம். பிறகு இலங்கையை வந்தடைந்தோம். பின்னர் எங்களை ஒரு புத்தகக் கடையில் சேர்த்தார்கள். அங்குள்ள வியாபாரி எம்மை அழகான கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்தார். நாம் சௌகரியமாகவும் ஒன்றாகவும் இருந்தோம். நாம் அழகாகக் கண்ணாடிப் பெட்டிக்குள் காணப்பட்டோம். புத்தகக் கடைக்கு வந்த கவிஞர் ஒருவர் என்னை விரும்பி வாங்கினார். அவரது வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார்.

எனக்கு, மற்றவர்களைப் பிரிந்து செல்வது மிகவும் துக்கமாகவே இருந்தது. அந்தக் கவிஞருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் வில்சன். அவன் ஒரு குறும்புக்காரன்.

அவன் கேட்ட ஒரு பொருளை அவர் வாங்கிக் கொடுக்காததால், அவன் கோபமடைந்து அந்தக் கவிஞரின் பேனாவான என்னை நிலத்திலடித்துடைத்தான். அவனது தாய் என்னைக் குப்பையில் எறிந்தார். இப்போது நான் குப்பையில் தவித்துக் கொண்டிருக்கின்றேன்.

**என்.நபீல் அஹமட், தரம் 5", அல் மின் ஹாஜ் தே.பாடசாலை, ஹபுகஸ்தலாவை, நாவலப்பிட்டி.**




## சிந்தனைக்கு...!

* சோம்பேறித்தனம் வெற்றிக்குத் தடையாகும்.
* பொறுமை வெற்றிக்கு முதல் படி.
* தீமையான காரியத்தை விட நன்மையான காரியத்தில் நாட்டம் கொண்டால் வாழ்க்கை வசந்தம் பெறும்.
* உண்மையான உழைப்பு என்றும் அழியாது.
* நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடு. வாழ்க்கை வசந்தமாகும்.
* நம்பிக்கையுடன் செயல்படு. வெற்றி நிச்சயம்.



**எம்.எப்.ரிஸ்னா, தரம் 11",**
**அல்/பத்ரியா ம.வி, கஹட்டோவிட்ட.**

## பறவைகள் பலவிதம்..!



இறக்கை இல்லாத பறவை - கிவி
அதிக நீரருந்தும் பறவை - புறா
மிகப் பெரிய முட்டை இடும் பறவை - தீக்கோழி
மிகச் சிறிய முட்டை இடும் பறவை - வெவ்வெயின்
மிக வேகமாகப் பறக்கும் பறவை - சுவிப்ட்
பின்புறமாகப் பறக்கும் பறவை - ஹம்மிங் பேர்ட்
அழகிய கூடு கட்டும் பறவை - தூக்கணாங்குருவி

**ஏ.எச்.ஆர்.முஹம்மத், தரம் 07",**
**அல்.பத்ரியா ம.வி,**
**கஹட்டோவிட்ட,**
**வெயாங்கொடை**

## மீன்கள்..!

மீன் நீரில் வாழும் பிராணி
மீன்களில் பல இனங்கள் உண்டு
மீன்களில் பல நிறங்கள் உண்டு
மீன் சத்துள்ள ஓர் உணவாகும்

மீனில் புரதச் சத்து அதிகம் உண்டு
மீன் தன் காதின் பூக்களால் சுவாசிக்கும்
இலங்கையைச் சுற்றிக் கடல் இருப்பதால் இங்கு
அதிகளவு மீன்கள் காணப்படுகின்றன.

கடலில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு அரசாங்கம்
மானிய அடிப்படையில் கடன்
வழங்குகின்றது!



**எஸ்.ஜீவரஞ்சனி, தரம் 08,**
**பது/விக்னேஸ்வரா த.ம.வி, ஹொப்டன்.**

## வீட்டுத் தோட்டம்..!

தோட்டம் எங்கள் தோட்டமாம்.
அழகான தோட்டமாம்
பூத்த மலர்க் கூட்டமாம்
இரவில் மலரும் கூட்டமாம்



கனி மிகுந்த தோட்டமாம்
காணத் தகுந்த தோட்டமாம்
பழுத்தால் நன்றாய் இருக்குமாம்
பழம் மிகுந்த தோட்டமாம்
தின்றால் நன்றாய் இருக்குமாம்
தின்னத் தின்ன இனிக்குமாம்.
அழகானத் தோட்டம்
பயன் மிகுந்த தோட்டமாம்!

**அஸ்லா அஹமட், தரம் 6",**
**வியாங்கல்லை மு.ம.வி.**

## ஏன்..!

கடைகள் மூடிக் கிடப்பதேன்?
காவல் வண்டி திரிவதேன்?

ஓடும் காரும், பஸ்களும்
ஓட்டம் இன்றி நிற்பதேன்?

தெருவில் சனங்கள் இல்லாமல்
நகரம் செத்துக் கிடப்பதேன்?

விமானம் மேலே பறப்பதேன்?
வேட்டுச் சத்தம் கேட்பதேன்?

கதவை இறுக்கிப் பூட்டி நாம்
வீட்டில் முடங்கிக் கிடப்பதேன்?

நாட்டில் என்ன நடக்குது?
நாமும் விளங்கச் சொல்வீரோ?

**எம்.பி.வஸீம் அஹமட், தரம் 09,**
**புனித.மரியாள் கல்லூரி, நாவலப்பிட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


சு.கஜன்,
வகுப்பு 9A,
வ/விபுலானந்தாக் கல்லூரி,
வவுனியா.
**அங்கத்துவ இல-133**


த.சிவசீலன்,
வகுப்பு 10B,
வவு/தமிழ் ம.ம.வி,
வவுனியா.
**அங்கத்துவ இல-134**


எஸ்.கோகிலவாணி,
தரம் 6A,
பதுு/ஸ்ரீ கணேசா த.ம.வி,
மீதும்பிட்டிய. பசறை.
**அங்கத்துவ இல-135**


அபுல் கலாம்,
தரம் 12 (வர்த்தகம்),
மதினா தேசிய கல்லூரி,
சியம்பலகஸ்கொட்டுவ.
**அங்கத்துவ இல-136**


த.விதுர்சன்,
தரம் 05,
யா/நல்லூர் காசிப்பிள்ளை
வித்தியாலயம். யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல-137**


அ.ஜெல்வின்,
தரம் 3A,
இ/றோமன் கத்தோலிக்க
ம.வி, இரணைபாலை.
**அங்கத்துவ இல-138**


எம்.அஸ்கர்,
தரம் 8D,
க/அல்மனார் தேசிய
கல்லூரி, ஹந்தஸ்ஸ.
**அங்கத்துவ இல-139**


ஆயிஷா நஸீர்,
தரம் 03T,
புனித அந்தோனியார்
கல்லூரி, கண்டி.
**அங்கத்துவ இல-140**


சுபைல் ஷிஹாப்,
தரம் 04,
அக்/அரசினர் முஸ்லிம்
ஆ.வி, அக்கரைப்பற்று.
**அங்கத்துவ இல - 141**


ஜெ.கோகுலன்,
தரம் 09T,
புனித சூசையப்பர்
கல்லூரி, கொழும்பு 10
**அங்கத்துவ இல-142**


எம்.மபாஸ்,
மட்/மெத்தைப்பள்ளி
வித்தியாலையம்
மட்டக்களப்பு.
**அங்கத்துவ இல-143**


ஜெ.தயாபரன்,
தரம் 1B,
சென் ஜோசப் த.ம.வி,
மஸ்கெலியா.
**அங்கத்துவ இல-144**

# நன்றி மறந்தவன்




முன்னொரு காலத்தில் நாடோடி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனிடம் திறமை வாய்ந்த குரங்கொன்று இருந்தது. இந்தக் குரங்கிற்கு மிகச் சிறப்பாகக் கரணம் அடிக்க முடியும். பலவிதமான விநோதமான வேலைப்பாடுகளையும் செய்துக் காட்டும் திறமையும் இதனிடம் காணப்பட்டது. ஆகையால் இந்தக் குரங்கையும் அழைத்துக் கொண்டு ஊர், ஊராகச் சென்று இந்தக் குரங்கின் வித்தைகளைக் காட்டிப் பணம் சம்பாதித்து வந்தான். ஒவ்வொரு ஊராரும் கூட்டம் கூடி மனமுவந்து பணம் கொடுத்து வந்தனர். இந்தக் குரங்குக்கு நன்றாகப் பேசவும் தெரிந்திருந்தது.

இப்படி இருக்கையில் நாடோடி ஒருநாள் அவசரத் தேவை காரணமாக வெளியூர் செல்ல வேண்டியிருந்தமையால், குரங்கினை வேறொருவனிடம் கொடுத்து விட்டு நகரிலிருந்து புறப்பட்டுச் சென்றான். குரங்கோ தனது எஜமானனான நாடோடி திரும்பி வரும் வரையில் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தது. சில நாட்களின் பின்னர் நாடோடி திரும்பி வந்தான்.

தூரத்தில் வைத்தே அவனின் பேச்சுக் குரல் சத்தத்தைக் கேட்டுவிட்ட குரங்கு, மிகவும் சந்தோஷப்பட்டு அவனது தோளில் அமர்வதற்காகப் பாய்ந்தது. இதனைச் சற்றும் எதிர்பாராத நாடோடிக்குக் கோபம் வந்தது. குரங்கினைக் கடிந்து கொண்ட அவன், கையிலிருந்த தடியினால் குரங்கை நன்றாக அடித்து அருகே காணப்பட்ட மாமரத்தில் அதனைக் கயிற்றினால் கட்டி விட்டான்.

இந்தச் சம்பவத்தினால் குரங்கிற்குப் பெரும் கவலை ஏற்பட்டது. இந்தளவிற்கு உதவி செய்த தனக்கு இந்த நாடோடி இப்படிச் செய்து விட்டானே? என அது கவலைப் பட்டது. இப்படிப்பட்டவனிடம் இனிமேலும் மனிதாபிமானத்தை எதிர் பார்க்கமுடியாது என்பதை உணர்ந்த அது, நாடோடி ஆழ்ந்த நித்திரையிலிருந்த நேரம் பார்த்து, தன்னைக் கட்டியிருந்த கயிற்றை ஒருவாறு கழற்றிக் கொண்டு, மாமரத்தின் மேலேறி ஒரு கிளையில் குந்திக் கொண்டது. இதன் பின்னர் மாமரத்திலிருந்த மாம்பழங்களை ஒவ்வொன்றாகப் பிடுங்கி ருசிக்கத் தொடங்கியது. மாம்பழத்தைச் சாப்பிட்டவாறே, மாம்பழக் கொட்டை, மாம்பழத் தோல் ஆகியவற்றைக் கீழே உறங்கிக் கொண்டிருந்த நாடோடியின் மீது வீசி எறிந்தது.

மாம்பழக் கொட்டையொன்று நாடோடியின் மூக்கின் மீது 'படீர்" என விழுந்ததில் வலியினால் துடிதுடித்துப் போய் நித்திரையிலிருந்து விழித்தான் அந்த நாடோடி. விழித்தவன் சுற்றும், முற்றும் பார்த்தான். கட்டிப் போடப்பட்டிருந்த குரங்கு கயிற்றைக் கழற்றிக் கொண்டு மரக்கிளையின் மீது அமர்ந்திருப்பதைக் கண்டான்.

"எனது அருமைக் குரங்கே....., ஆசைக் குரங்கே கீழே இறங்கி வாராய்...... நான் உனக்குத் தின்பதற்குப் பழம் தருகிறேன்..." என ஆசை வார்த்தை கூறினான். ஆயினும், குரங்கோ மரத்திலிருந்து கீழே இறங்கவில்லை. மீண்டும் அந்த நாடோடி மிகவும் கெஞ்சலுடன் "எனது அருமைக் குரங்கே கீழே இறங்கி வாராய்..... உன்னை நான் தோளில் சுமந்து செல்கிறேன்......" எனக் கூறினான். ஆனாலும் குரங்கோ கொஞ்சமேனும் மசியவில்லை. மரத்தின் மீதே அமர்ந்து கொண்டிருந்தது.

"நான் உன் மீது மிகவும் பாசம் கொண்டிருந்தேன். உனக்கு நிறைய பணமும் சம்பாதித்துக் கொடுத்தேன். ஆனால், நீ என்னைக் காரணமின்றி அடித்தாய்.... ஆகையால் நான் இனி ஒருபோதும் உன்னிடம் வர மாட்டேன்" எனக் கூறிக் கொண்டே மரத்திற்கு மரம் தாவியவாறு காட்டிற்குள் சென்று மறைந்தது குரங்கு. நாடோடியோ.... வெறுங்கையுடன் மிகவும் கவலையுடன்.... வீடு திரும்பினான்.

எந்தவொரு விடயத்தையும் பாசத்தோடும், பரிவோடும் தான் சாதிக்க முடியும். அது மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் பொருந்தும் என்பதையே இக்கதை உணர்த்துகின்றது. எதையும் கட்டுப்படுத்தும் சக்தி அன்புக்கு மட்டுமே உள்ளதல்லவா?


# விஜய் சந்தா விபரம்

**'விஜய்' பத்திரிகையினைக் கீழ்க் காணும் சந்தாத் தொகையினைச் செலுத்தித் தபாலிலும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ 269/= | ரூ 130/= |
| தபாலில் | ரூ 364/= | ரூ 182/= |

**பின்வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.**
**(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)**

**கூப்பன்**

பெயர்/Name ------------------------------------------------

முகவரி/Address ------------------------------------------------

தொ.பே.இல/T.P No: ------------------------------------------------

மின் அஞ்சல்/E-mail ------------------------------------------------

விண்ணப்பிப்பது : பாடசாலை/நிறுவனம்/வாசகர் (தேவையற்றதை வெட்டிவிடுங்கள்)
எமக்கு .................. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்

---------------------- --------------------
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ, காசோலையாகவோ அனுப்பலாம். காசுக் கட்டளையை (MO) மாற்றும் தபால் கந்தோர்: **SLAVE ISLAND POST OFFICE** எனக் குறிப்பிட்டு, **CIRCULATION MANAGER, Wijeya News Papers Ltd, No-08, Hunupitiya Cross Road, Colombo 02** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். காசோலை அனுப்புவோர் **Wijeya News Papers Ltd** என்ற பெயருக்கு எழுதவும்.

**மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல : 2314714 ext -523**
**Email: vijey@wijeya.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியிலுள்ள கூறுகளைத் தெரிந்து கொள்வோம்!





குருதி என்பது ஓர் இழையமாகும். குருதியில் திரவத்திலான கூறும், கலங்களிலான கூறும் இருப்பதை அவதானிக்கலாம். இதில் திரவக் கூறு திரவ இழையம் எனப்படும். கலக்கூறானது செங்கு ழியம், வெண்குழியம், குருதிச் சிறுதட்டு என்ப வற்றைக் கொண்டதாகும்.

* 70 கி.கிராம் சராசரி திணிவுடைய மனிதனின் உடலில் 5-6 லீற்றர் குருதி காணப்படுகின்றது.
* 12 கி.கிராம் திணிவுடைய குழந்தையின் உடலில் ஒரு லீற்றர் குருதி காணப்படுகின்றது.

## குருதித் திரவ இழையம்

குருதித் திரவ இழையம் ஏறத்தாழக் கனவளவில் 55% ஐக் கொண்டிருக்கும். இதில் 90-92% நீர் காணப்படும். மேலும், குருதிப் புரதங்களான :- அல்புமின், குளோபியூளன், பைபிரினோஜன் என்பனவும் கனியுப்புக்கள் போசனைப் பதார்த் தங்கள், பிற பொருளெதிரிகள், வாயுக்கள் என்பனவும் இதில் காணப்படும்.

## செங்குழியங்கள் (Red Blood Corpuscles)

* இவை வட்டத்தட்டுப் போன்றவை. கருவற்றது.
* ஒரு கன மில்லி லீற்றர் குருதியில் 4.5-5 மில்லியன் எண்ணிக்கையில் இவை காண ப்படும்.
* செவ்வென்பு மச்சையில் இவை உற்பத்தி யாகும். குருதியில் இவை 120 நாட்கள் உயிர் வாழும்.
* ஈமோகுளோபின் எனப்படும் செந்நிறப் பொருள் அடங்கியிருப்பதால் செந்நிறமாக இவை காணப்படும்.

## வெண் குழியங்கள் (White Blood Corpuscles) W.B.C

* 600 செங்குழியங்களுக்கு ஒரு வெண் குழியம் என்ற ரீதியில் இவை குருதியில் அமைந்திருக்கும்.
* ஒரு கன மில்லி லீற்றர் குருதியில் 6000-11000 வரை காணப்படும்.
* இவை நிலையான வடிவமற்றவை. இவை என்பு மச்சையில் தோற்றுவிக்கப்படும்.
* வெண்குழியங்கள் இரு வகைப்படும். அவையாவன- சிறு மணி கொண்ட வெண் குழியங்கள், சிறு மணி அற்ற வெண்குழியங்கள் ஆகும்.
* சிறு மணி கொண்டவை மூல நாடி, நடுநிலை நாடி, அமிலநாடி என்பவற்றில் காணப்படும்.
* இவை கருவைக் கொண்டவையாகும். எனவே, இவை நீடித்த ஆயுட் காலத்தைக் கொண்டவையாகும்.
* இவை போலிப்பாதங்களை உருவாக்கிப் பற்றீரியாக்களை விழுங்கும். இச்செயற்பாடு தின்குழியச் செயற்பாடு எனப்படும்.

## குருதிச் சிறுதட்டுக்கள்

* இவை ஒழுங்கற்ற வடிவமுடையவை. கரு அற்றவை. இவை என்பு மச்சையில் உருவாகும்.
* ஒரு கன மில்லி லீற்றர் குருதியில் 250,000 வரை காணப்படும்.
* காய மேற்பட்டுக் குருதி வெளியேறும் போது குருதி உறைவதற்கு இவையே உதவும்.

ஏஞ்சல் டேனியல், ஆண்டு 11,
திருக்குடும்ப கன்னியர் மடம்,
பம்பலப்பிட்டி.

(அறிவியற் கலசம்...)
(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்று நின்று பெக்ரல் என்பவரும் பக்கத் துணையாத் துணை புரிந்தார். அதன் பேறாக மேரி அம்மையாருக்கும், பெக்ரலுக்கும் இணை யான நோபல் பரிசு வழங்கப் பெற்றது.

மேடம் மேரி கியூரி அம்மையார், தனது தேடல் அறிவியற் பணிகளில் பல இன்னல்கள், தடை கள், இழப்புகள் அடைந்த போதிலும் மனந்தள ராது விடா முயற்சியுடன் ஈடுபட்டு, வெற்றி கண்ட ஒரு மங்கை நல்லாள்.
இத்தனைக்கும் இடையில் அவர் ஒரு நல்ல குடும்பத் தலைவியாகவும், கணவனுக்கு ஒரு நல்ல துணைவியாகவும் இருந்தார். அத்துடன், இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பாசமிகு தாயாகவும் விளங்கினார். இத்தகைய ஓர் இலட்சி யப் பெண்மணியின் வாழ்வில் தான் மீண்டும், மீண்டும் சோதனைகள் பல ஒன்றன் பின் ஒன் றாக ஏற்பட்டன.
அவருடைய கணவர் பியோர் கியூரி விபத்தொன் றில் சிக்கித் திடீரென்று இறந்தார். இச்சம்பவம் அம்மையாரின் மனதைப் பெரிதும் பாதித்தது. இருந்தும் அவர் மனந் தளராது திட சித்தத்தோடு தன் ஆய்வுப் பணிகளிலும், குடும்பப் பொறுப்பு களிலும் ஈடுபட்டு முன்னேறி நிற்க முனைந்தார். அதன் பயனாக இரண்டாந் தடவையாகவும் நோபல் விருதுக்கும், உலகப் புகழுக்கும் ஆளானார்.

நாட்டுப் பற்றும், அறிவுத் திறனும் மிக்க மேடம் கியூரி அம்மையார் 67 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த ஒரு பெண் மேதை. அவர் தனது இறுதிக் காலத்தில் லியூகோமியா என்ற இரத்தப் புற்று நோய்க்கு ஆளானார். வாழ்நாளில் தொடர்ந்து இரசாயனத் திரவங்களுடன் புழங்கியதாலேயே இந்நோய் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று மருத்து வர்கள் தெரிவித்தனர். அறிவியல் துறையின் மாண்புறு வனிதையாக இவர் திகழ்ந்துள்ளார். அத்துணை மாண்மிகு பெருமாட்டி - அறிவியல் உலகம் உள்ளவரை நின்று நிலைப்பார் என்ப தில் எதுவித ஐயமும் இல்லை.
என்னே பெண்ணின் பெருமை!


(ஈத் பெருநாள்...)
(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தும் திருநாளாகக் கொள்ளப்படுவதனா லேயே நோன்புப் பெருநாளுக்கு "ஈதுல் பித்ர்" என்ற பெயர் வந்தது. நோன்புப் பெருநாள் கொண்டாடும் மகிழ்ச்சியில் ஏழைகளை மறந்து விடக்கூடாது என்பதால் பித்ரா வழங்குவது செல் முறை யாக்கப் பட்டுள்ளது. குடும்பத்திலுள்ள சகல அங்கத்தவர்களுக்குமாகப் பித்ரா வழங் கப்பட வேண்டும். இரண்டு கிலோ அரிசி அல் லது அதற்கு ஒத்த கோதுமை மாவினைப் பித்ராவாக வழங்கலாம்.

பெருநாளைத் தனவந்தர்கள் ஏழைகள் எல்லோ ரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என்ப தனை உறுதிப்படுத்துவதற்காகவே இஸ்லாம் பித்ரா வழங்குவதனை வசதி படைத்த சகலருக் கும் கடமையாக்கியுள்ளது.
நோன்புப் பெருநாள் தினத்தில் காலை உணவை உட்கொண்ட பின்னரே பெருநாள் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். தொழுகையின் பின் தம் வீடுகளுக்கும், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்கும் சென்று ஸலாம் கூறி வாழ்த்த வேண்டும். இதன் மூலம் பகைமைகள் நீங்கி நல்லுறவு வளர்கின்றது. பல இன மக்கள் வாழும் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் ஏனைய இனச் சகோதரர்களிடையே நல்லெண்ணம், இன ஒற்றுமை வளர்வதற்கு இந்தத் தினத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வசதி வாய்ப்புள்ளவர்கள் தமது விருந்துகளில் அயலில் வாழும் சகோதரர்களைப் பங்கு பெறச் செய்ய வேண்டும்.

நோன்பு பெருநாளின் பின் மேலும் ஆறு நாட்க ளுக்கு நோன்பு நோற்கலாம். இது கட்டாயமான தல்ல. இவ்வாறு 6 நாட்கள் நோற்பதன் மூலம் ஒரு வருடம் நோன்பு நோற்ற நன்மைகளைப் பெறலாம். நோன்பில் பெற்ற தார்மீகப் பயிற்சி யைர், தொடர்ந்தும் தம் வாழ்வில் கடைபிடிப்ப தற்கு இப்பெருநாளில் ஒவ்வொரு முஸ்லிமும் மன உறுதி கொள்ள வேண்டும்.

படத்தை
இங்கே
ஒட்டவும்



பெயர் :..............................................
முகவரி :..............................................
..............................................
பாடசாலை : ..............................................
வகுப்பு : ..............................................

விஜய்
மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வழங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## சீனாவில் பரிதாப நிகழ்வு!



சீனாவின் மத்திய பகுதியில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக 122 பேர் மரணமுற்றதாகவும், 26 பேரைக் காணவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சீனாவில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பாரிய சுரங்க விபத்தாக இது கருதப்படுகின்றது. குறித்த இடம் நிலக்கரி அதிகம் காணப்படும் ஒரு பகுதியாகும்.

பாதிப்புக்குள்ளாகிய 'சென்ச் சோவு' என்ற இந்த நிலக்கரிச் சுரங்கத்தில் வருடத்திற்கு 6.6 மில்லியன் தொன் அளவிலான நிலக்கரி அகழ்ந்தெடுக்கப்பட்டு வந்தது. பொதுவாகவே சீனாவில் நிலக்கரிச் சுரங்கப் பகுதிகளில் இவ்வாறான அனர்த்தங்கள் நிகழ்வது வழமையாகியுள்ளது. இதனால் நிலக்கரிச் சுரங்க வேலைகளில் ஈடுபடும் ஊழியர்களின் உயிருக்கு எந்த வகையிலும் உத்தரவாதம் இல்லாத நிலையே இங்கு நிலவி வருகின்றது. ஒரு வாரத்தில் மட்டும் 200 பேருக்கும் அதிகமானோரின் உயிர்கள் இவ்வாறு காவு கொள்ளப்பட்டுள்ளதாகவும் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

## உலகிலேயே மிக உயரத்தில் உள்ள வீடு!



உலகிலேயே மிக உயரமான மாடி வீட்டுத் தொகுதியொன்று அவுஸ்திரேலியாவிலுள்ள குவின்ஸ்லாந்தில் கட்டப்பட்டு வருகின்றது. 527 வீடுகளைக் கொண்ட இந்தக் கட்டிடத்தில் 80 மாடிகள் உள்ளன. பிரசித்தி பெற்ற தங்கக் கடற்கரை என்று அழைக்கப்படும் "கோல்ட் பீச்" எனும் பகுதியிலேயே இக்கட்டிடம் கட்டப்படுகின்றது. இக்கட்டிடப் பணிகள் முடிவடைந்த பின்னர், இதன் கடைசி மாடியின் உச்சியில் அமைக்கப்படும் வீடே உலகிலேயே மிக உயரத்தில் உள்ள வீடாகவும் கருதப்படும்.


## அவுஸ்திரேலியப் பிரதமரின் பதவிப் பிரமாணம்!



அவுஸ்திரேலியாவின் பிரதமராக ஜோன் ஹோவாட் மீண்டும் நியமனம் பெற்றுள்ளார். ஆளுநரான மைக்கல் ஜெ.ஃப்ரியின் முன்னிலையில் அவர் தனது பதவிப் பிரமாணத்தை மேற்கொண்டிருந்தார். அவுஸ்திரேலியாவின் பொருளாதாரத்தை மேலும் வளர்ச்சிப் பாதையை நோக்கி மேம்படுத்தும் சவாலை அவர் எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருப்பினும், ஜோன் ஹோவாட் மீண்டும் பிரதமராக நியமனம் பெற்றிருப்பது குறித்து அவுஸ்திரேலிய மக்கள் மத்தியில் அத்துணை மகிழ்ச்சி காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது!

## ஒட்டக ஓட்டப் போட்டிக்கு ரோபோக்கள் அறிமுகம்!

மத்திய கிழக்கு நாடுகளில் ஓட்டப் பந்தயம் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு விளையாட்டாகும். எனினும், உலக நாடுகள் பலவற்றில் இந்த விளையாட்டிற்குக் கடும் எதிர்ப்பு நிலவி வருகின்றது. ஓட்டப் பந்தயங்களின் போது, ஒட்டகத்தின் மீது சிறுவர்களை அமர்த்தியே அந்த ஒட்டகங்களை ஓடச் செய்யப்படுகின்றது. சிறுவர்கள் வீறிட்டு அழும் சத்தத்தில் மிரண்டு போகும் இந்த ஒட்டகங்கள் வேகமாக ஓட்டமெடுக்கின்றன. இதன் அடிப்படையிலேயே அந்த ஒட்டகங்களுக்கிடையே ஓட்டப் பந்தயம் நடக்கின்றது. 9 இற்கும் 14 ற்கும் இடைப்பட்ட வயதையுடைய சிறுவர்களே இதற்குப் பயன்படுத்துகின்றனர்.
இந்த சிறுவர்கள் சில சந்தர்ப்பங்களில் ஒட்டகங்கள் ஓடுகின்ற வேகத்தில் அவற்றின் மேலிருந்து கீழே விழுந்து மரணமடையும் சந்தர்ப்பங்களும் உள்ளனவாம். இதனால் தான் உலக நாடுகள் பல இந்தப் போட்டியை எதிர்த்து வருகின்றன.
எனவே, இதனை கருத்திற் கொண்டு சிறுவர்களுக்குப் பதிலாக ரோபோக்களைப் பயன்படுத்தத் தக்க வகையிலான நவீன ரோபோக்களைச்



சுவிட்ஸர்லாந்து நாடு கண்டுபிடித்துள்ளது.

மேற்படி பரீட்சார்த்தக் கண்டுபிடிப்புச் சாத்தியப்பட்டால் அநாவசியமாகச் சிறுவர்களை வருத்தும் இந்த ஒட்டகப் பந்தயத்தில் ரோபோக்களை ஈடுபடுத்தும் இம்முயற்சி பாராட்டுக்குரிய அம்சமாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

## தோல்வியை ஜீரணிக்க முடியாத சுகர்ணோபுத்ரி!

இந்தோனேஷியாவில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, முன்னாள் ஜனாதிபதி சுகர்ணோபுத்ரி தோல்வி அடைந்தமை நாம் அறிந்ததே! மேற்படி தேர்தலில் வெற்றியீட்டி இந்தோனேஷியாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகிய சுசிலோ பெம்பேங் யுடோயோனோவுக்கு எந்தவொரு சம்பிரதாயபூர்வ வாழ்த்துக்களையேனும் கூறாமல், முன்னாள் ஜனாதிபதியான சுகர்ணோ ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு, வெற்றியீட்டிய புதிய ஜனாதிபதியின் பதவிப் பிரமாண வைபவத்தில் கூட சுகார்ணோபுத்ரி கலந்து கொள்ளவில்லை. தோல்வியை ஜீரணிக்க முடியாத நிலையிலேயே இவர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார் என விமர்சகர்கள் கருதுகின்றனர்.
தேர்தலொன்றில், மக்கள் வாக்குகளின் மூலம் வெற்றியீட்டிய முதலாவது ஜனாதிபதி என்ற கௌரவத்தை, சுசிலோ பெற்றுள்ள நிலையிலும் கூட அவரை வாழ்த்துவதற்கு முன்வராத சுகர்ணோபுத்ரி அதே காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவில் மீண்டும் பிரதமராகத் தெரிவாகிய பிரதமர் ஜோன் ஹோவாட்டுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு மட்டும் அவர் மறக்கவில்லை. இதே வேளை புதிய ஜனாதிபதி சுசிலோ, முன்னாள் ஜனாதிபதியான சுகர்ணோவைச் சந்திக்க விருப்பம் தெரிவித்திருந்த நிலையிலும் அதனைக் கூடச் சுகர்ணோ நிராகரித்து விட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### அற்லஸ் கேள்வி - 02

கேள்வி

**இந்தோனேஷியாவின் புதிய ஜனாதிபதியின் பெயர் என்ன?**

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களையும் எழுத மறவாதீர்கள்.

சரியான விடை :..................................................

அனுப்ப வேண்டிய முகவரி

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம்,
கேள்வி - 02,
விஜய்,
த.பெ.எண் 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிரைக் குடிக்காதே!

அத்தியாயம் - 3

நரசிம்மன்

குமுதாவின் வீட்டில் பேய் குடியிருப்பதாக அந்த மனிதர் கூறியதை மனதுக்குள் நினைத்துச் சிரித்த படியே படியில் இறங்கி நடந்தான் மயூரன். படிக்கட்டுகளும், வீட்டு வளவும் சிதைந்து சின்னா பின்னமாக இருப்பது ஏன் என்று சிந்தித்துக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தான்.
வீட்டைப் பார்த்ததும் அவனுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால், வீடும் அதில் யாரும் குடியிருப்பது போல் தெரியவில்லை. பாழடைந்தது போல் இருந்தது. ஒரு காலத்தில் மிக அழகாகக் காட்சியளித்த வீடு, இப்பொழுது ஆங்காங்கே வெடித்துப் போயும், உடைந்தும் காணப்பட்டது.

உண்மையில் அந்த வீட்டைப் பற்றித் தெரியாதவர்கள் அது பேய் குடியிருக்கும் வீடு என்று தான் நினைப்பார்கள். அதனால் தான் அந்த மனிதர் அப்படிக் கூறிவிட்டுப் போயிருப்பார் என்று நினைத்துக் கொண்டான் மயூரன். சிறிது முன்னேறி வீட்டை நோக்கி நடந்தான். வீட்டை நெருங்க, நெருங்க உள்ளூர ஏதோ பயம் ஏற்படுவது போல் உணர்ந்தான். அதற்குக் காரணம் அங்கே கேட்ட சத்தங்கள்.
நரி ஊளையிடுவதைப் போலவும், இன்னும் ஏதேதோ சத்தங்கள் வீட்டுக்குள் கேட்டன.

குமுதாவின் குரலையோ, அல்லது அவள் அம்மா, அப்பா யாருடையதும் குரலையோ கேட்க முடியவில்லை. வீட்டு வாசற் கதவின் யன்னல் கண்ணாடியும் உடைந்து காணப்பட்டது. வீட்டுக்கு அருகில் சென்றவன் மெதுவாக யன்னல் துவாரமூடாக உள்ளே நோட்டமிட்டான்.
உள்ளே சிலந்திக் கூடுகளும், ஒட்டை உடைசல்களும் காணப்பட்டன. மனிதர் யாரும் அந்த வீட்டில் இருப்பது போல் தெரியவில்லை. அவனுக்கு அதற்கு மேலும் அங்குந் நிற்க முடியவில்லை.

வீட்டில் யாரும் இல்லையென்பது நன்கு புரிந்தது. திரும்பிப் போய்விட வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டான். இருந்தாலும் போக மனம் வரவில்லை. வீட்டுக்கு முன்னால் அழகாகக் காட்சியளித்த பூந்தோட்டத்தைக் கொஞ்சம் பார்க்க வேண்டும் போல் தோன்றியது. குமுதாவின் அம்மா பூச்செடிகள் வளர்ப்பதில் மிகுந்த ஆர்வமுடையவர். விதம் விதமாகப் பூக்கள் அங்கு காட்சியளிக்கும். இப்பொழுது அது எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகப் பூந்தோட்டத்துக்குள் மெதுவாகக் காலடி எடுத்து வைத்தான்.

பூந்தோட்டமா அது? அதுவும் பாழடைந்துதான் காணப்பட்டது. செடி. கொடிகள் எல்லாம் கருகி வனாந்தரம் போல் காட்சியளித்தன. மயூரனுக்கு எதுவும் புரியவில்லை. ஏன் இந்த நிலை? என்று சிந்தித்தான். இங்கு ஏதோ அசம்பாவிதம் நடந்துள்ளது என்று மட்டும் அவனுக்குப் புரிந்தது.
பூந்தோட்டத்தை அடுத்துக் காய்கறித் தோட்டம் ஒன்றும் இருந்தது. குமுதாவின் தாயார் பூந்தோட்டம் செய்வதில் எவ்வளவு ஆர்வம் உள்ளவரோ அதே போன்று காய்கறித் தோட்டம் செய்வதில் அவளின் அப்பா ஆர்வம் உடையவர். விதம், விதமான காய்கறிகள், தானியங்கள் மற்றும் தாவரங்களை ஆர்வத்துடன் உற்பத்தி செய்வார். நாட்டில் கிடைக்காத பயிரினங்கள் கூட அவரின் தோட்டத்தில் கிடைப்பதாகப் பெருமையாகச் சொல்லிக் கொள்வார்.

அந்தத் தோட்டம் இப்பொழுது எப்படி இருக்கிறதென்று பார்ப்பதற்கு அவனுக்கு மிகுந்த ஆசையாக இருந்தது பூந்தோட்டத்தைக் கடந்து அந்தக் காய்கறித் தோட்டத்துக்குள் நுழைந்தான். காய்கறித் தோட்டமும் அதே போன்று தான் காட்சியளித்தது. செடி, கொடிகள் காய்ந்தும், கருகியும் காணப்பட்டன. முன்னர் அவன் அந்த ஊரில் இருக்கும் போது சில சந்தர்ப்பங்களில் குமுதாவின் அப்பாவிடம் வந்து காய்கறிகளும் வாங்கிச் சென்றிருக்கின்றான். வீட்டுத் தேவைக்கு மட்டுந்தான் அவர் காய்கறித் தோட்டம் செய்தார். ஆனாலும், அவசரத் தேவைகளின் போது அவரிடம் போய் பலரும் காய்கறி வாங்குவது உண்டு. அவரிடம் வாங்கும் காய்கறிகள் சுத்தமானதாகவும், சுவைமிக்கதாகவும் இருக்கும். அவ்வளவு பெறுமதி மிக்கதாக இருந்த அந்தக் காய்கறித் தோட்டம் இன்று இருக்கும் நிலையைப் பார்க்கும் போது அவனுக்கு மிகுந்த கவலையாக இருந்தது.

காய்கறித் தோட்டத்தை நோட்டமிட்டபடியே நடந்தான். அந்தக் காய்கறித் தோட்டத்தை அடுத்து காட்டுப் பகுதிதான் இருந்தது. காய்கறித் தோட்டத்தின் எல்லை வரை மெதுவாக நடந்து சென்றான்.

தோட்டத்தின் எல்லைப் பகுதியில் அவன் கண்ட காட்சி.......?

அவனுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.



அங்கே..........?

கல்லறை ஒன்று காணப்பட்டது. அவனுக்கு வியப்பாக இருந்தது. அந்த ஊர் மயானம் சற்றுத் தூரத்திலேயே அமைந்திருந்தது. அப்படி இருக்கும் போது இங்கு எப்படிக் கல்லறை காணப்படுகிறது என யோசித்தான்.

"சில வேளை குமுதாவின் குடும்பத்தினர் யாராவது இறந்து இங்கு புதைத்திருப்பார்களோ?" என்று சிந்தித்துக் கொண்டே கல்லறையின் அருகில் சென்றான். அந்தக் கல்லறையில் ஒரு பெண்ணின் புகைப்படம் பதிக்கப்பட்டு அதற்கு அடியில் பெயர், பிறப்பு, இறப்பு விபரங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டான். இருள் சூழும் அந்த அந்திப் பொழுதில் அந்த இடத்தில் தனியாக இருப்பது அவனுக்கு ஒருவித அச்சத்தையும் ஏற்படுத்தியது. உள்ளூரப் பயம் இருந்தாலும் அந்தக் கல்லறையில் புதைக்கப்பட்டிருப்பது யார்? என்பதை அறிய வேண்டும் என்னும் ஓர் ஆவலும் அவனுக்கு ஏற்பட்டது.

குமுதாவின் வீட்டில் பேய் குடியிருப்பதாக அந்த மனிதர் கூறியதும் வீடும், தோட்டங்களும் பாழடைந்து கிடப்பதும் அந்தத் தோட்டத்துக்குள் கல்லறை காணப்படுவதும் அவனுக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தின. பின்னர் ஒருவாறு மனதுக்குள் தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

"இந்தக் கம்யூட்டர் யுகத்தில் பேய், பிசாசு என்றெல்லாம் மூடத்தனமாக பயப்படுவதா? என்று பிறருக்குப் புத்தி சொல்லும் நானா இப்படி பயப்படுவது?" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு கல்லறை அருகில் சென்றான். குனிந்து நோட்டமிட்ட போது படமும், அதன் கீழிருந்த குறிப்புக்களும் சரியாக விளங்கவில்லை. ஆதலால் கல்லறையின் முன்னால் முழந்தாளிட்டு அமர்ந்தபடி அந்தப் புகைப்படத்தை நோக்கினான்.

அவனால் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நெஞ்சம் வெடிப்பது போல் இருந்தது. அங்கே.....? காணப்பட்டது குமுதாவின் புகைப்படம் தான்! அவனுக்குத் தலை சுற்றியது அச்சமும், பீதியும் ஏற்பட்டன. அவனையுமறியாமல் அந்தப் புகைப்படத்துக்குக் கீழுள்ள குறிப்புகளை நோட்டமிட்டான். அதில் குமுதவள்ளி என்ற குமுதாவின் முழுப்பெயரும், பிறப்பு, இறப்புக் குறிப்புகளும் காணப்பட்டன. அவனால் அதற்கு மேலும், அங்கு இருக்க முடியவில்லை. திரும்பிச் செல்வதற்கும் பயமாக இருந்தது. மெதுவாக எழுந்து போக நினைத்து அமர்ந்த படியே முகத்தைத் திருப்பினான்.

அங்கே.......?

தலைவிரி கோலத்துடன் பெண்ணொருத்தி அவனையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்...)

## மனிதன் நடக்கும் முறையைப் பார்!



நாலு காலில் தவழ்ந்து வாறார் தம்பி
நாங்கள் தூக்கி எடுக்கமாட்டோம் தம்பி
தத்தக்கா புத்தக்கா நாலு கால்
தவழ்ந்து வாறார் சிரிப்பைப் பார்!

அங்கே பாரு எங்கள் தம்பி நடக்கிறார்
அழகாய்க் காலை எட்டிப் போட்டு நடக்கிறார்
தானே நடந்தால் இரண்டு கால்
தனியே வாறார் நிமிர்ந்து பார்!

பொல்லை ஊன்றி மூன்று காலில் நடக்கிறார்
பல்லில்லாத தாத்தாவாகிப் போய்விட்டார்
முத்திப் பழுத்தால் மூன்று கால்
முடிவில் இப்போ சோர்வு பார்!

தத்தக்கா புத்தக்கா நாலு கால்
தானே நடந்தால் இரண்டு கால்
முத்திப் பழுத்தால் மூன்று கால்
முழுதும் நமது கதையைப் பார்!

கவிஞர் ஏ.இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE WITCH WHO POLLUTED THE POND



Once there was a witch living close to a pond.She was living in a two storeyed house with her family.
The pond was close to her house .When the animals of the jungle came to drink water ;they made such a noise that the witch did not like it..
Besides she did not want to be disturbed when animals bathed there.
So she thought of making the animals stay away from the pond..She thought for a long time and came to a conclusion.
"I am going to get this pond closed."She told herself.
She instructed one of her faithful servants to pollute the pond.
They opened an upstair window and threw dirt into it.
The animals who came to the pond noticed the dirt and shouted at the witch.,as they saw the servant polluting the water.
"What a mean witch?"animals shouted .
"A witch of a bad upbringing" .
The witch heard the animals shouting.But she kept quiet.
The animals got very angry .They were angrier as the witch did not even bother to apologise ..
She has no manners at all." The animals shouted.
They all went to the fox and told him of their plight ..
"Oh! oh! I know that she has done a bad thing .But I can't do anything; because the witch is so powerful."the fox said.

"But you have to do something .Otherwise from where are we going to drink water ?''the animals asked.
"This witch is very powerful .She knows many sorts of sorcery in the world.Besides she has a reputation for doing wicked things."the fox said.
"But that is not an excuse .She should be punished."the animals said.
"But I can't punish her. she has a little one who still drinks milk from her." The fox said.
"But she has to undergo punishment ,that is the law of the jungle.''the animals shouted.
"The fox said that one had to consider the little one.Otherwise it would be a violation of her rights.

But the animals said that it was a violation of animals' rights,as she had polluted the pond.
The fox agreed to advice her.The fox sent a message to the witch.But she did not dare to come.
"Who is that fox to ask me to come and meet him?''the witch did not leave her premises.
But she sent her wizard instead..Stating she was nursing the baby she could not come.
The fox felt sorry for the witch.and asked her wizard as to why she polluted the pond.
The wizard said that it was done by the servant.But the fox argued on behalf of the animals.The fox said that whoever did it, was a cruel being..
"Why did you allow her to do it?''the fox asked philosophically.
"The servant may have done it without realising the gravity of it."the wizard said.The
fox said that ignorance of the law was not an excuse.
But the wizard argued that they were above the law of the animals.
The fox said that nobody was above the law.
But the wizard maintained that they were above the law..
But the animals shouted that nobody was above the law.
"But we are. We are.The judge is our cousin.The jury is comprised my witche's relatives.So we are above the law'''.the wizard said.
The fox thought for a while.What a mean attitude this one has towards the animals he thought.
"What a hypocrite''the animals shouted.
The wizard denied that allegation too.He said that he was merely above the law.
"There aren't two kinds of law.One has to abide by the law of the jungle."the animals shouted.
But he said as he was a wizard and as he was not an animal he was above the law.
The fox could not bring the culprit in to book.The witch family could hoodwink even the mighty law of the jungle.-.
Then the animals went in search of the demon of the area.They told him about their plight.
The demon in turn asked the demon in charge of the pond to take action and and punish the witch.
But the witch outwitted the demons also.She said that the demons can't punish her.
"Let the animals go in search of a far away pond.I am above the law"she told the demon.
Even the demons could not punish the witch.As she was a good sorcerer and because of that nobody could punish her.She had everybody spellbound, according to the animals.
The animals wondered to know what they could do.They said that they could not live without water.The other pond was far away on the otherside of the jungle.




"What are we to do ?"the animals asked.
Meanwhile the wise old owl who was sleeping during the day time heard this commotion and got up.
"What is all this about?''the owl hooted .The animals told the owl about their dilemma.
"My gosh it is terrible .Everybody is suffering because of the witch.'' the owl said.
The animals said that the witch practised sorcery .
The owl asked the animals to practice the new method.They asked the owl what the new method was.
"Go, meet the gang leader."the owl advised.
The animals wanted to know the meaning of it.

The owl asked them to meet the mosquito.
"The mosquito , what can he do ?He can't punish a witch.''they said.
"Take my word and run to him.''the owl said.
So all the animals big and small rushed to meet the little insect.
"What can we do for you ?''the gang leader of the mosquito squadron asked.
"Oh! we don't know.But we have a problem.and the wise owl wanted us to contact you about it.''the animals said..
The gang leader wanted to know everything from the beginning.
The animals told him about the witch and how she polluted the pond with the help of her servants.
The gang leader promised them that he would take care of the witch and her family.
All the female mosquitoes of the colony were asked to lay eggs in the pond.

A lot of mosquitoes were bred..They flew inside the house of the witch.The dreadful "Dengue"epidemic was a menace to the witch's household.
The witch was furious. She said that somebody had beaten her witchcraft.
An aide to the witch tried to explain the matter to her.
"If you had only considered about the poor animals who came to the pond.,You would have been spared."
"Oh! how terrible ?Now do I have to suffer?''the witch asked.
"YES OF COURSE!''the aide replied,to the dissapointment of the witch.
The end

***By: CHANDRANI FERNANDO...***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக் களம் Sports

தயாரிப்பு: வி.ரெட்லி ஹெரிசன்

## சாஃப் போட்டிகளைப் பின்போடும் உத்தேசம்!

அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இலங்கையில் நடத்தப்படவுள்ள சா.்.ப் விளையாட்டுப் போட்டிகளைச் சில நாட்களுக்குப் பின்போடுவதற்குத் தேசிய ஒலிம்பிக் கமிட்டி திட்டமிடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, அதே மாதத்தில் 20 ஆம் திகதி நடத்துவதற்கே தேசிய ஒலிம்பிக் கமிட்டி விரும்புவதாக அறியவருகின்றது. 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14 ஆம் திகதி வரை பின்லாந்து ஹெல்சிங்கியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் இலங்கை வீரர்கள், மேற்படி சா.்.ப் போட்டிகளிலும் கலந்து கொள்ளவுள்ளமையினால், அவர்களுக்கு ஓய்வு நேரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கே, சா.்.ப் போட்டிகளைச் சில தினங்களுக்குப் பின் போட உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்!

இது குறித்து ஏனைய நாடுகளின் கருத்தை அறிவதில் ஆர்வமாக இருப்பதாகவும், இந்நாடுகளின் சம்மதம் கிடைத்தால் மட்டுமே சா.்.ப் போட்டிகள் பின்போடப்படும் எனவும் தெரியவருகின்றது. இது குறித்துத் தெற்காசிய ஒலிம்பிக் கமிட்டிக்கும் எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சாஃப் போட்டிகள் கெத்தாராம அரங்கில்!

இம்முறை இலங்கையில் நடத்தப்படவுள்ள சா.்.ப் விளையாட்டுப் போட்டிகளைக் கொழும்பு கெத்தாராம விளையாட்டரங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டிகளின் ஆரம்ப விழாவில் சுமார் 10,000 பாடசாலை மாணவர்களின் கண்காட்சி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வீரருக்கு அமெரிக்காவில் வாய்ப்பு!

இலங்கையின் சார்பாக உயரம் பாய்தல் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தி வரும் மஞ்சுள குமார என்ற வீரருக்கு அமெரிக்க கலிபோர்னியா மாநில பல்கலைக்கழகம் புலமைப்பரிசில் ஒன்றை வழங்கவுள்ளது. இதன்படி இவர் அமெரிக்காவில் தனக்குரிய பயிற்சியினைப் பெறுவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. இவருக்கான செலவுகளை இலங்கையின் விளையாட்டுத் துறை அமைச்சுப் பொறுப்பேற்றுள்ளது.

விமானப் பயணச் செலவு, பயிற்சிச் செலவு, உள்நாட்டு விமானச் செலவு, விளையாட்டு உடைகள், மருத்துவச் செலவுகள் ஆகிய அனைத்தும் விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படும்.

இலங்கையின் முன்னாள் உயரம் பாய்தல் வீரரும், தற்போது அமெரிக்காவில் வசித்து வருபவருமான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்பவரே மஞ்சுளா குமாரவிற்கு மேற்படி புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொடுப்பதற்குக் கடுமையாக முயற்சித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




அனில் கும்பிளே, கிளேன் மெக்ராத், ஷேன் வோர்ன் ஆகியோர் சிறந்த விக்கெட் பெறுபேறுகளைப் பெற்றதை முன்னிட்டு நடத்தப்பட்ட பாராட்டு வைபவத்தின் போது மூவரும் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.



இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரினை வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணியினர் வெற்றிக் கிண்ணத்துடன் காணப்படுகின்றனர்.

## நிக்கிபோயே தயக்கம்!

தென் ஆபிரிக்க அணியினர், இந்தியாவில் மேற்கொள்ளவுள்ள கிரிக்கெட் சுற்றுலாவில் கலந்து கொள்ளப்போவதில்லை எனத் தென் ஆபிரிக்க வீரர் நிக்கிபோயே தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் இவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளமையால் இந்தியாவில் வைத்து இதற்கான தண்டனைக்கு ஆளாகக் கூடும் என்ற அச்சத்திலேயே நிக்கிபோயே இந்தியா வர மறுத்துள்ளார்.

2000 ஆம் ஆண்டில் இந்தியா, தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளின் போது தென் ஆபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் குரொஞ்ஞே, நிக்கிபோயே, ஹர்ஷல் கிப்ஸ் ஆகியோர் மீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாகக் குரொஞ்ஞேக்கு ஆயுட்காலக் கிரிக்கெட் தடை விதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை இம்முறை இந்தியா வரவுள்ள அணியில் ஹர்ஷல் கிப்ஸ் தெரிவாகாத போதிலும் நிக்கிபோயே தெரிவாகியுள்ளார். இத்தகைய ஒரு பின்னணியில் - தான் இந்தியாவிற்குச் சென்றால் சர்ச்சைக்குள் சிக்கவேண்டி வருமோ? என நிக்கிபோயே அச்சம் கொண்டுள்ளார்.

தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபையின் பேச்சாளர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "நிக்கிபோயேயைக் கைது செய்வதில்லை" என டில்லி பொலிஸ்துறை எழுத்து மூல உறுதியை வழங்கினால், நிக்கிபோயே இப்போட்டித் தொடரில் கலந்து கொள்வார் எனத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அ.்.ப்ரிடியைப் பற்றி..!

**பாகிஸ்தான் அணியின் சகல துறை ஆட்டக்காரரான அ.்.ப்ரிடி பற்றிய சில விபரங்கள் வருமாறு.......!**

முழுப்பெயர் :- மொஹமட் ஷிட் கான் அ.்.ப்ரிடி.
பிறந்த திகதி :- 1980 ஆம் ஆண்டு மார்ச் 01.
துடுப்பாட்டம் :- வலது கை.



பந்து வீச்சு :- வலது கை சுழல் பந்து.
முதலாவது டெஸ்ட் :- கென்யாவிற்கு எதிராக (1998/1999)
முதலாவது ஒரு நாள் :- கென்யாவிற்கு எதிராக (1996/1997)

டெஸ்ட்
போட்டிகள் 14, ஓட்டங்கள் 780,
கூடிய ஓட்டம் 141, விக்கெட்கள் 42,
சிறந்த பந்து வீச்சு 5/52

ஒரு நாள் போட்டி
போட்டிகள் 187, ஓட்டம் 4114, கூடிய ஓட்டம் 109, சதங்கள்-3, அரைச் சதங்கள் 24, விக்கெட்கள் 147, சிறந்த பந்து வீச்சு 5/11.

## கிரிக்கெட் பயிற்றுவிப்பு!

இலங்கைத் தேசிய கிரிக்கெட் அபிவிருத்தி தலைமையகத்தின் ஏற்பாட்டிலான, கிரிக்கெட் பயிற்றுவிப்புத் திட்டத்தின் கீழ், 100 கிரிக்கெட் வீரர்களுக்கு பெரதெனியாவில் கிரிக்கெட் பயிற்றுவிப்புக்கள் அண்மையில் வழங்கப்பட்டன. கேகாலை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலிருந்து சுமார் 30 பாடசாலை மாணவர்கள் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அக்கடமியின் பயிற்றுவிப்பாளர்கள் ஹேமந்த தேவப்பிரிய, தேசிய 'A' அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்டேன்லி ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். இவர்களோடு மத்திய மாகாணத்தைச் சேர்ந்த இதர 21 பயிற்றுவிப்பாளர்களும், அப்பயிற்றுவிப்பு முகாமில் தமது பங்களிப்பையும் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருபாலை கிழக்கு, ஸ்ரீமுருகன் முன்பள்ளியின் 2004 ஆம் ஆண்டிற்கான மெய்வல்லுனர் போட்டியின் போது சிறுவர்கள் தேகாப்பியாசப் பயிற்சியை வெளிப்படுத்துவதையே படத்தில் காண்கிறீர்கள்.



ஏக்கலை கிறேலயின் பார்க் 'பிறைட்' பாலர் பாடசாலையில் இடம் பெற்ற சிறுவர் தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களைப் படத்தில் காணலாம்.




அம்மயன் குளம், சியம்பலா கெஸ்கடுவையிலுள்ள "ஃப்ரீ" பாலர் பாடசாலையில் இடம் பெற்ற கலைவிழாவின் போது, மாணவியர்களின் நடனத் தோற்றம் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.






'விழா உலா'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு



கிரிசோர், தரம் 1, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.



எம்.என்.எம்.அகில், தரம் 2, பதுரியா ம.க, மாவனல்லை.



ஆர்.ஜெனிபர் ரோஷினி, தரம் 2, பூண்டுலோயா த.ம.வி பூண்டுலோயா.



எம்.ஆர்.எம்.அமான், தரம் $4^{A}$, பாத்திமா மு.ம.க புத்தளம்.



குணநாயகம் தபேஸ்காந், தரம் $6^{D}$, மட்/பட்டிருப்பு தேசிய பாடசாலை களுவாஞ்சிக்குடி.




எஃப்.பாரிஸா ருஸ்தி, தரம் $8^{A}$, களு/களுத்துறை முஸ்லிம் பா.ம.வி, களுத்துறை.



ஜே.அஸ்பா, தரம் $10^{E}$, அல்.அக்ஸா தேசிய பாடசாலை, கற்பிட்டி.



ஆ.துஷியந்திரா, தரம் 7, நு/கேம்பிரிஜ் கல்லூரி, கொட்டகலை.



இ.தர்ஷன், தரம் $8^{E}$, கொ/விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.



ஆர்.பார்த்தீபன், தரம் 8, கு/அல் அக்ஸா மு.ம.வி, பொல்கஹவலை.




பிள்ளைகளே!
நீங்களும் உங்கள் கைவண்ணங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம்.
உங்கள் சித்திரங்களை A4 தாளில் மாத்திரம் வரைந்து, பெயர் விபரங்களைச் சித்திரங்களின் பின்புறமாக எழுத மறவாதீர்கள்
அனுப்பவேண்டிய முகவரி:-

'கைவண்ணங்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

## சிறுவர் இசைப்பாடல்

### பார் அங்கே........!

அண்ணா அண்ணா வா இங்கே
வண்ண நிலவைப் பார் அங்கே
சந்திரன் பற்றி சொல் அண்ணா
சிந்திடும் நிலவைப் பார் அண்ணா!

வானக் கடலில் நீந்துகின்ற
சந்திரன் எங்கள் தோழனடா
அமுதாய் நிலவைப் பொழிகின்றான்
அழகு முகத்தைப் பார் தம்பி!

அண்ணா அண்ணா வா இங்கே
வண்ண மேகம் பார் அங்கே
மேகம் பற்றி சொல் அண்ணா
ஓடும் மேகம் பார் அண்ணா!

தாகம் கொண்ட பயிர்களுக்கே
மேகம் மழையைத் தந்திடுமே
கருமை நிறத்தில் கும்பல் பார்
அரிய காட்சி பார் தம்பி!

அண்ணா அண்ணா வா இங்கே
நட்சத்திரத்தைப் பார் அங்கே
தாரகை பற்றி சொல் அண்ணா
மின்னும் அழகைப் பார் அண்ணா!

வானில் நீந்தும் மீன்கள் தான்
வாகாய்த் தெரியும் தாரகைகள்
சந்திர தேவனின் தோழிகளாம்
மின்னும் அழகைப் பார் தம்பி!

அண்ணா அண்ணா வா இங்கே
சூரிய ஒளியைப் பார் அங்கே
சூரியன் பற்றி சொல் அண்ணா
சீரிய சிறப்பை சொல் அண்ணா!


உழவர் எங்கள் தோழனடா
உழைக்கும் மக்கள் நண்பனடா
உலகம் போற்றும் நல்லவனாம்
திலகம் எங்கள் சூரியனே!

**கவிஞர் - திக்குவல்லை ஸப்வான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

வழிகாட்டுங்கள்






1,2,3,4,5 என இப்பக்கத்தில் இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளைத் தபாலுறையிலிட்டு முகவரிக் கூப்பனை வெட்டி ஒட்டி மாணவர் பெயர், வகுப்பு, பாடசாலை, பாடசாலை முகவரி, நிரந்தர முகவரி, அருகில் உள்ள நகரம், மாவட்டம் முதலான விபரங்களுடன் தபாலில் அனுப்பவும். ஒவ்வொரு பகுதியில் இருந்தும் தெரிவு செய்யப்படும் ஓர் அதிர்ஷ்டசாலிக்குச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்)தலா ரூ.150/= பெறுமதியான பண வவுச்சர்களைக் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கும்.

**முகவரிக் கூப்பன்**


அற்லஸ் அறிவுக்கு விருந்து 6
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 3 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

| போட்டி : 1 | போட்டி : 2 | போட்டி : 3 | போட்டி : 4 |
|---|---|---|---|
| ஏ.பீ.எம்.ஸியாட், தரம் 6A, ஸாஹிரா தேசிய கல்லூரி,மாவனல்லை | சோனியா ஜெயகார்த்திஹா நடராஜா, தரம் 8B, புனித கப்பிரியல் மகளிர் ம.வி,ஹற்றன். | எம்.என்.எஃப்.நஸ்ரினா தரம் 4, கா/துந்துவை முஸ்லிம் ம.வி, துந்துவை. | கே.கபிலேஷ், தரம்6, க/ரணபிம றோயல் கல்லூரி, பேராதனை. |

2

### இவ்விரு படங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



3

**'அ' நிரலிலுள்ள கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகள் 'ஆ' நிரலில் காணப்படுகின்றன. சரியான விடைக்குரிய இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

'அ' நிரல்

1.சீகிரியச் சுவரோவியங்கள் வரையப்பட்டுள்ள பாணியில் அமைந்த சுவரோவியங்களை இங்கு காணலாம். (------------)

2.சர்வதேச ஓசோன் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. (-------------)

3.சோவியத் இராச்சியத்தின் அழுத்தங்களை எதிர் கொள்ளவதற்காக அமெரிக்கா, பிரித்தானியா உட்பட 12 நாடுகள் இணைந்து உருவாக்கிய நேட்டோ அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. (--------)

4.இங்கிலாந்திலுள்ள லோட்ஸ் மைதானத்தில் முதன் முதலில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடர் ஆரம்பிக்கப்பட்டது. (--------------)

5.இலங்கையில் முகமூடிக் கைத்தொழிலுக்குப் பிரசித்தி பெற்ற இடம் (---------)

6.சர்வதேச எயிட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்படுவது (-------------)

7.இலங்கையில் அதிக மழைவீழ்ச்சி உள்ள இடம் (------------)

'ஆ' நிரல்

1.டிசம்பர் 1ம் திகதி
2.1884ம் ஆண்டு
3.அஜந்தா குகை
4.வட்டவளை
5.செப்டெம்பர் 16ம் திகதி
6.அம்பலாங்கொடை
7.1947ம் ஆண்டு

4

**பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதினால் எவ்வாறு அமையும் என்பதை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

1.கை+நூல் = ------------------------
(கையின் நூல், கைந்நூல்,கைநூல், கைனூல்)

2.ஐந்து+தொகை = ------------------------
(ஐந்து தொகை, ஐதொகை, ஐந்தொகை, ஐம்தொகை)

3.நூறு+ஆண்டு = ------------------------
(நூற்றாண்டு, நூறாண்டு, நூறுஆண்டு, நூற்றுஆண்டு)

4.கருமை+இருள் = ------------------------
(கருமிருள், கருமையிருள், கரியஇருள்,காரிருள்)

5.வெண்மை+கலம் = ------------------------
(வெள்ளைக் கலம், வெண்மைக்கலம், வெண்கலம், வெள்ளிக்கலம்)

5

## குறுக்கெழுத்துப் போட்டி, இல. 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | ரு |
| | ■ | 4 | | | ■ |
| 5 | | | 6 டா | ■ | 7 |
| | ■ | 8 | | 9 | |
| | ■ | | ■ | | ■ |
| 10 கை | | ■ | 11 | | |

**அற்லஸ் வழங்கும் 5 ஆம் இலக்கத்திற்குரிய பரிசினை, குறுக்கெழுத்துப் போட்டியை நிரப்பி வெற்றி கொள்ளுங்கள்.**

**மேலிருந்து கீழ்**

1. அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம்.
2. வெப்பம் நிறைந்த பெரிய மணல் வெளியை இவ்வாறு அழைப்பர்.
3. ஐம்பொறிகளில் ஒன்று (தலைகீழ்)
6. பங்களாதேஷின் தலைநகரம் (குழம்பி)
7. இவ் ஆண்டின் முற்பகுதியில் ஈரானில் ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தினால் சேதமான நகரம்.
9. இந்தியாவின் தேசிய விளையாட்டு.

**இடமிருந்து வலம்**

1. இரண்டு அடிகளைக் கொண்ட தமிழ்ச் செய்யுள் வகை.
3. சில உலோகங்களில் உப்பு, காற்று, நீர் போன்றவை பட்டு, நாளடைவில் ஏற்படும் தாக்கம்.
4. விண்வெளிக்கு முதன் முதலில் சென்ற நாயின் பெயர்.
5. மத்திய கிழக்கு நாடுகள் அமைந்துள்ள எல்லைக்குட்பட்ட பகுதி. (குழம்பி)
8. காடு. (குழம்பி)
10. உடை வகையொன்று.
11. பாணன் என்பதன் பெண்பால்.

பெயர் :- ..............................................

நிரந்தர முகவரி :- ..............................................

பாடசாலை :- ..............................................

பாடசாலை முகவரி :- ..............................................

வகுப்பு :- ..............................................

அருகில் உள்ள நகரம் :- ..............................................

மாவட்டம் :- ..............................................

### போட்டி விதி முறைகள்

1. சரியான விடைகளை உரிய சதுரக் கட்டங்களில் நிரப்பிக் கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து, தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி நவம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்.
2. சரியான விடைகளை எழுதியோரில் 'அற்லஸ்' வழங்கும் பணவவுச்சர் பரிசு ஒருவருக்கு வழங்கப்படுவதோடு பாராட்டுப் பெறும் மேலும் மூவரின் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

எமது முகவரி →

குறுக்கெழுத்துப் போட்டி -17
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### போட்டி. இல - 15இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பெ | ஸ் | 2 லா | ன் | ■ | 3 தி |
| ன் | ■ | ட | ■ | 4 ப | ரி |
| 5 ட | 6 த | ம் | 7 ஔ | ■ | சூ |
| 8 க | லை | ■ | வை | ■ | ல |
| ன் | ■ | 9 தி | யா | க | ம் |
| ■ | 10 வ | சை | ர் | ■ | ■ |




### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. ராஜேந்திர குமார், தரம் 11, சிவானந்தா த.வி, கண்டி.
2. அஜிதா பாலசுப்பிரமணியம், தரம் 13A, யா/வடமராட்சி ம.ம.க,
3. எஃப்.ஹஸ்னா முத்தலிப், தரம் 10, கு/ஹிஸ்புல்லா ம.க, குருநாகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகழ்பெற்ற நாடுகாண் பயணிகள்


## ரெட் எரிக் மற்றும் லிப் எரிக்சன்

வைகிங் என்பவர்களே உலகின் மிகச் சிறந்த நாடுகாண் பயணிகளாக முன்பு கருதப்பட்டனர். இவர்களே அற்புதமான, மிகவும் விருத்தி பெற்ற கடற்படைத் தொழில் நுட்பத்தின் முன்னோடிகள் என்று கூறலாம். இதன் காரணமாக இவர்கள் கி.பி 790 முதல் கி.பி 1100 வரை உள்ள காலப் பகுதியில் உலகின் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்தனர் என்பதற்கான பதிவுகள் உள்ளன. இவர்களில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒருவராகக் கருதப்படுபவர் ரெட் எரிக் என்ற கடலோடியாவார்.

இவர் கி.பி 950 ஆம் ஆண்டில் நோர்வே நாட்டிலுள்ள ஜேரென் என்ற இடத்தில் பிறந்தார். நோர்வே நாட்டில் பிறந்த இவரின் தலை முடி சிவப்பு நிறமாக இருந்தமையால் இவரை ரெட் எரிக் என்ற பெயரால் அழைத்தனர். எரிக் 10 வயதாக இருக்கும் போது அவரது தந்தையால் ஐஸ்லாந்து நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டார். அதன் பின் நோர்வே நாட்டிற்குத் திரும்பி வந்த அவர் மனிதப் படுகொலையுடன் சம்பந்தப்பட்டமையால் திரும்பவும் ஐஸ்லாந்து நாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இக்காலப்பகுதியில் கடும் குளிரில் வாழ்வதற்கு மிகவும் கஷ்டப்பட்ட அவர் அதிலிருந்து விடுபட வழி தேடினார். பின்பு கடும் பிரயத்தனம் செய்து கடல் பயணம் மேற்கொண்டு கிறீன்லாந்து நாட்டைச் சென்றடைந்தார். அங்கு வாழ்ந்த அவர் கி.பி 985 ஆம் ஆண்டில் 25 கப்பல்களில் ஐஸ்லாந்தில் வாழ்ந்த மக்களை ஏற்றிக் கொண்டு கிறீன்லாந்து வந்தார்.

ஆனால், கிறீன்லாந்தை நெருங்கும்போது 14 கப்பல்களே மிகுதியாக இருந்தன. அக்கப்பல்களில் 450 பேர் மட்டுமே இருந்தனர். இவரது முயற்சியின் பின்பே கிறீன்லாந்தில் குடியேற்றங்



கள் உருவாகின.

லிப் எரிக்சன், ரெட் எரிக்கின் ஒரே புதல்வன். கி.பி 982 இல் பிறந்த இவர் நல்ல கட்டுடல் கொண்டவராக இருந்தார். மிகச் சிறந்த கடற்படை வீரராக இருந்த இவர் கிறீன்லாந்திலிருந்து நேரடியாக நோர்வே மற்றும் ஸ்கொட்லாந்துக்குச் செல்லக் கூடிய திறமைசாலியாக இருந்தார். "ஜானா ஹெர்ஜோப்சன்" என்ற




வர்த்தகன் கிறீன்லாந்தின் தென் மற்றும் மேற்குத் திசையில் மிகப் பெரிய பிரதேசம் ஒன்று உள்ளது என்று கூறியதற்கமைய கி.பி 1000 ஆம் ஆண்டில் லிப் அப்பிரதேசத்தைத் தேடித் தன் பயணத்தை ஆரம்பித்தார். 35 பேர் கொண்ட தனது குழுவுடன் கடல் பயணத்தை ஆரம்பித்த அவர் பவின் தீவினுக்கும் பின்பு நியூபவுண்ட்லாந்திற்கும் சென்றார். இதற்கு வின்லண்ட் என்ற பெயரை வைத்தார். இதன் காரணமாக அமெரிக்காவைத் தேடிக் கண்டுபிடித்தவர் என்ற பெருமை லிப் எரிக்சனைத் தான் சாரும் என்ற அபிப்பிராயம் காணப்படுகின்றது.

திரும்பவும் கிறீன்லாந்து நாட்டிற்குத் திரும்பிய லிப் எரிக்சன் தான் தேடிக் கண்டு பிடித்த இடங்கள், நாடுகள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்தினார். அதன்பின் அவரது சகோதரரான தனோர் வால்ட் வின்லண்ட் இடம் சென்றார். அதன் பின்பு அவர் அவ்விடத்திலிருந்து திரும்பி வரவில்லை. 45 வயதில் இறந்த லிப் எரிக்சன் அமெரிக்காவை முதலில் கண்டுபிடித்த ஐரோப்பிய நாட்டவர் என்ற பெருமையைப் பெற்றுக் கொள்கிறார். இதன் காரணமாக 1964 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த லிண்டன்.பீ.ஜோண்சன், அமெரிக்காவைக் கண்டு பிடித்த முதலாவது ஐரோப்பியரை நினைவு கூரும் முகமாக ஒக்டோபர் 9 ஆம் திகதியை "லிப் எரிக்சன்" தினமாகப் பிரகடனப்படுத்தினார்.


# அற்லஸ் சித்ரு அகில இலங்கைச் சித்திரப் போட்டி 4(2005)



அன்புமிக்க மாணவர்களே,

உங்கள் படைப்பாற்றல்களை ஊக்குவிக்கு முகமாக "அற்லஸ் சித்ரு" அகில இலங்கைச் சித்திரப் போட்டியை நடத்துவதற்கு, வரையறுக்கப்பட்ட சிலோன் பென்சில் நிறுவனம் முன் வந்துள்ளது. கல்வி அமைச்சின் பூரண அங்கீகாரத்துடனும், மேற்பார்வையுடனும், நடைபெறுகின்ற இந்தச் சித்திரப் போட்டியின் மூலம், பல ஆயிரம் பெறுமதி மிக்க பரிசில்கள், அற்லஸ் பாடசாலை உபகரணங்கள், பெறுமதிமிக்க சான்றிதழ்கள் ஆகியன வழங்கப்படவுள்ளன. உங்களுக்கு விருப்பமான ஒரு தலைப்பில் சித்திரமொன்றை வரையலாம். "பெஸ்டல்" வர்ணங்களால் மட்டும் சித்திரங்கள் வரையப்பட வேண்டும்.

### போட்டி விபரங்களும், விதிமுறைகளும்

* ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
* 35 செ.மீ 45 செ.மீ அளவுடைய தாளில் வரையப்படல் வேண்டும்.
* பெஸ்டல் வகை வர்ணங்கள் கொண்டு வரையப்படல் வேண்டும்.
* உங்கள் சித்திரங்கள், "அற்லஸ் சித்ரு சித்திரப் போட்டி 4(2005), லங்கா பென்சில் நிறுவனம், இல.96, பராக்கிரம றோட், பேலியகொட." என்ற முகவரிக்கு 2005.01.07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, விஜய நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் வெளியீடுகளான விஜய், Funday Times, விஜய ஆகிய பத்திரிகைகளில் வெளிவருகின்ற கூப்பனையோ அல்லது அதற்குச் சமமான கூப்பனையோ தயாரித்துப் பாடசாலை ஓவியப் பாட ஆசிரியரின் கையொப்பத்துடனும், பாடசாலை அதிபரின் முத்திரையுடனான கையொப்பத்துடனும் உறுதிப் படுத்தி அனுப்பப்படல் வேண்டும்.
* சித்திரத்தை நீங்கள் "அற்லஸ் பெஸ்" கொண்டு வர்ணம் தீட்டியிருப்பின் அற்லஸ் சிகப்பு நிற பெஸ்டல் வர்ணப் பூச்சின் உறையொன்றைச் சித்திரத்தின் பின்புறமாக ஒட்டி அனுப்பினால் நமது நிறுவனம் அற்லஸ் பெஸ் தொடர்பாக மேற்கொள்கின்ற ஆய்விற்கு அதனைச் சேர்த்துக் கொள்ள முடியும். (ஆனால் வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இது எவ்வகையிலும் சம்பந்தப்படாது)
* கல்வி அமைச்சின் அதிகாரிகள் உட்படத் தகுதி வாய்ந்த நடுவர் குழுவொன்றினால் சிறந்த சித்திரங்கள் தேர்ந்தெடுக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணங்களைக் கொண்டும் மீண்டும் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.
* போட்டி முடிவுகள் விஜய், Funday Times, விஜய ஆகிய பத்திரிகைகளிலும் ஐ.ரி.என் தொலைக்காட்சியிலும், லக்ஹண்ட வானொலி ஒலிபரப்பிலும் வெளியிடப்படும்.
* மேலதிக விபரங்களுக்கு 011-2912874, 2912879 என்ற தொலைபேசி இலக்கங்களில் சிலோன் பென்சில் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பணப் பரிசு விபரங்கள்

| தரம் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|
| தரம் 1-2 | 3,500.00 | 2,500.00 | 1,500.00 |
| தரம் 3-4 | 4,000.00 | 3,000.00 | 2,000.00 |
| தரம் 5-6 | 4,500.00 | 3,500.00 | 2,500.00 |
| தரம் 7-8 | 5,000.00 | 4,000.00 | 3,000.00 |
| தரம் 9-10 | 5,500.00 | 4,500.00 | 3,500.00 |
| தரம் 11-12-13 | 6,000.00 | 5,000.00 | 4,000.00 |

தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் அனைத்து வெற்றியாளர்களுக்கும், பணப் பரிசில்களுடன் அற்லஸ் தயாரிப்புக்கள் அடங்கிய பரிசுப் பொதியொன்றும், வெற்றிக் கிண்ணமும், பெறுமதிமிக்க சான்றிதழ் ஆகியனவும் வழங்கப்படும். மாகாண மட்டத்தில் வெற்றியீட்டும் அனைத்து வெற்றியாளர்களுக்கும் அற்லஸ் தயாரிப்புக்கள் அடங்கிய பரிசுப் பொதியும், சான்றிதழும். வெற்றியீட்டாத போதிலும், கண்காட்சிக்கெனத் தெரிவு செய்யப்படும் சித்திரங்களுக்குச் சான்றிதழ்களும், அற்லஸ் தயாரிப்புக்கள் அடங்கிய பரிசுப் பொதியொன்றும், கண்காட்சிக்கெனத் தெரிவு செய்யப்படாத சித்திரங்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### வெற்றியாளர்கள் தெரிவு

முதல் சுற்றின் படி நாடளாவிய ரீதியிலிருந்து சிறந்த சித்திரங்களை அனுப்புவோர் தெரிவு செய்யப்பட்டுக் கொழும்பிலுள்ள பிரதான பாடசாலை ஒன்றிற்கு அழைக்கப்படுவர். அங்கு கல்வி அமைச்சைச் சேர்ந்தவர்கள் உட்படத் தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் வழங்கப்படும் தலைப்பின் கீழான சித்திரமொன்றை வரைவதற்குப் பணிக்கப்படுவர். இதிலிருந்து தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களிலிருந்தே அனைத்து மட்டத்திலான வெற்றியாளர்களும் தெரிவு செய்யப்படுவர்.

### சிறப்பு மலர்

தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் வெற்றியீட்டும் சித்திரங்கள் உட்பட வெற்றியாளர்களின் விபரங்கள் அடங்கிய சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படும்.

### சித்திரக் கண்காட்சியும், பரிசு வழங்கும் விழாவும்

2005 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில், சகல மாகாண மட்ட வெற்றியாளர்களின் சித்திரங்களும், தேசிய மட்ட வெற்றியாளர்களின் சித்திரங்களும் உட்பட, ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 50 சித்திரங்கள் வீதம் 300 சித்திரங்கள் தெரிவு செய்யப்பட்டு அவையே கண்காட்சிக்கு வைக்கப்படும்.

கண்காட்சியின் இறுதியில் தேசிய, மாகாண மட்ட வெற்றியாளர்கள் அனைவருக்கும் அமைச்சர்கள், ஓவியத்துறையில் சிறந்து விளங்கும் புகழ் பெற்ற கலைஞர்கள் ஆகியோரினால் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்படி, போட்டியில் பங்கு பற்றிச் சான்றிதழ்கள் மட்டுமே வெற்றி கொள்ளும் போட்டியாளர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களின் பாடசாலைக்கோ அல்லது வீட்டு முகவரிக்கோ பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### மாதிரிக் கூப்பன்

கல்வி அமைச்சின் முழு அங்கீகாரத்துடனும், மேற்பார்வையின் கீழும் வரையறுக்கப்பட்ட சிலோன் பென்சில் நிறுவனம், பாடசாலை மாணவர்களுக்காக நடத்தும்...

**சித்ரு தேசிய மட்ட சித்திரப் போட்டி 4(2005)**

முதலெழுத்துடன் மாணவன்/மாணவி பெயர்:- ....................

முகவரி:- ....................

பாடசாலையின் பெயர்/முகவரி:- ....................

2004 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் வகுப்பு/தரம்:- ..............

மாவட்டம்:- .................... மாகாணம்:- ....................

சித்திரத்தின் தலைப்பு:- ....................

விண்ணப்பதாரியின் கையொப்பம்:- ....................

குறிப்பு:- பெயர், முகவரி மற்றும் பாடசாலை ஆகியவற்றை ஆங்கிலத் தனி எழுத்துக்களில் எழுதவும்.

மேற்படி, சித்திரம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெயரைக் கொண்ட மாணவன்/மாணவியினது சுய ஆக்கம் என்பதை உறுதிப் படுத்துகிறேன்.

ஓவியப் பாட ஆசிரியர்/ஆசிரியையின் கையொப்பம் ....................

பாடசாலை அதிபரின் கையொப்பம் ....................

பிரதான அனுசரணை,
போட்டி அமைப்பாளர்கள்
எண்ணத்தின்
வண்ணங்களை
உலகிற்குத் தரும்
அற்லஸ்

ஊடக அனுசரணை
விஜய்
ITN Sri Lanka
ලක්හඬ RADIO ITN


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கேற்றும் மின்மினிகள் 3

கதை, சித்திரம்: உதயா







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி ... 2004 நவம்பர் மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 2, on November 15. 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org